விலை: 50.00 viber : 076 636 3378
பக்கங்கள் : 16

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com




சங்கு 23
ஒலி 200 வள்ளுவர் ஆண்டு 2053 ஆனி 23 வியாழக்கிழமை (07.07.2022) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## எரிபொருள் கப்பல் வருவது உறுதியில்லை

### மீண்டும் கைவிரித்தார் எரிசக்தி அமைச்சர் காஞ்சன



(கொழும்பு)

எதிர்வரும் 10 மற்றும் 15 ஆம் திகதிகளுக்குள் இலங்கை வரவிருந்த பெற்றோல் தாங்கிய கப்பல்கள் தமது வருகையை உறுதிப்படுத்தவில்லை என எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர நேற்று பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

( 15 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்ட நெரிசலில் மயங்கி விழுந்த இளைஞன் மரணம்

### பருத்தித்துறை நோக்கி பயணித்த பேருந்தில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

அதிகமான கூட்ட நெரிசலுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி பேருந்தில் பயணித்த 21 வயது இளைஞர் ஒருவர் மயங்கி விழுந்த நிலையில் உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் 16



அரசுக்கு எதிராக நேற்று கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம்

## மண்ணெண்ணெய் விலை உயர்வடையும்

### ரணிலும் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்காலத்தில் மண்ணெண்ணெய்யின் விலை அதிகரிக்கப்படுமென பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அதிகரிக்கப்படும் மண்ணெண்ணெய்யின் விலை மீனவர்களுக்கு மானியமாக வழங் 15

## முற்பணம் வழங்கினால் மாத்திரமே எரிபொருள்

### இலங்கைக்கு கடன் வழங்க தயக்கம் காட்டும் இந்தியா



(கோப்புப் படம்)

(கொழும்பு)

இலங்கை முற்பணம் செலுத்தினால் மாத்திரமே இந்தியா எரிபொருள் வழங்கத்தயாராகவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இலங்கைக்கு வழங்கிய கடன்கள் முடிவடைந்துள்ள நிலையில் இலங்கைக்கு எரிபொருளை வழங்கவேண்டும் என்றால் முற்பணம் செலுத்தப்படவேண்டும் என இந்தியா தெரிவித்துள்ளதாக தெரியவருகின்றது.

(15 ஆம் பக்கம் பார்க்க)

### 200 ரூபாயினால்

## சீமெந்து பக்கெட்டின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)

50 கிலோ கிராம் எடையுடைய சீமெந்து பக்கெட் 200 ரூபாயால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சீமெந்து விநியோகஸ்தர்கள் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

இதன்படி, சீமெந்து பக்கெட் ஒன்றின் புதிய விலை 3,200 ரூபாயாக நிர்ணயிக்கப் 15

## பண்ணை கடற்கரையில்

### முதியவரின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பண்ணை கடற்கரைப் பகுதியில் இனந் தெரியாத 15

## கொழும்பில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் ஹிருணிகா கைதாகி விடுதலை

### பொலிஸ்நிலையத்திற்கு நேரடியாக சென்ற சஜித்



(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஜனாதிபதி மாளிகைக்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினருமான ஹிருணிகாபிரேமச்சந்திர உள்ளிட்ட 11 15

### தென்னையிலிருந்து

## தவறிவிழுந்த முதியவர் மரணம்

### புலோலியில் சம்பவம்

(யாழ்ப்பாணம்)

தென்னைமரத்திலிருந்து தவறி விழுந்த முதியவர் ஒருவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரி 15

## காரைநகர் ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையத்தில்

### பெற்றோல் விநியோகம் நிறுத்தப்பட்டதால் குழப்பம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் ஐஓசி எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பெற்றோல் விநியோகம் திடீரென இடைநிறுத்தப்பட்டு டீசல் விநியோகம் ஆரம்பிக்கப் 15

## சர்வகட்சி அரசு அமைப்பது தொடர்பில் சஜித் தலைமையில் பேச்சுவார்த்தை

### அரசியல், பொருளாதார குழு நியமிக்கவும் தீர்மானம்



(கொழும்பு)

விரைவில் சர்வகட்சி அரசாங்கமொன்றை ஸ்தாபிப்பதற்கான மற்றுமொரு கலந்துரையாடல் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# அந்தியேட்டி அழைப்பு



கடந்த 08.06.2022 புதன்கிழமை அன்று
இறைபதமெய்திய எமது குடும்பத் தலைவி

## அமரர் தம்பிராஜா தங்கம்மா

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் நாளை (08.07.2022) வெள்ளிக்கிழமை காலை 4.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, அஸ்தி கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கரைக்கப்படும். இந்நிகழ்வில் கலந்து கொள்ளுமாறும் அதனைத் தொடர்ந்து நண்பகல் 12 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன விருந்திலும் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

செல்வம் மில்லேன்,
இமையாணன், உடுப்பிட்டி.

இங்ஙனம்:- குடும்பத்தினர்
077 609 8719

# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தின் J/411 புலோலி தென்மேற்கு கிராம அலுவலர் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக கடமையாற்றும் **சே.சுயாந்தினி** அவர்களின் அன்புத் தந்தையார்

## அமரர் தியாகராசா சங்கரப்பிள்ளை

அவர்கள் 01.07.2022 அன்று காலமாகிவிட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தோற்றம் 02.05.1940
மறைவு 01.07.2022

பிரிவுத் துயருடன்:-
பிரதேச செயலாளரும், அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.

(C-4581)

# அத்தியாவசியமின்றி இலங்கை செல்லாதீர்

## பிரித்தானிய, நியூசிலாந்து தமது நாட்டு பிரஜைகளுக்கு அறிவுறுத்து

(கொழும்பு)

அத்தியாவசிய விடயங்களை தவிர இலங்கைக்கு செல்வதைத் தவிர்க்குமாறு பிரித்தானியா ம்ற்றும் நியூசிலாந்து ஆகிய நர்டுகள் தமது நாட்டுப் பிரஜைகளை அறிவுறுத்தியுள்ளன.

புதுப்பிக்கப்பட்ட பயண ஆலோசனைக்கு அமைய இலங்கைக்கு பயணம் செய்வதைத் தவிர்க்குமாறு கூறப்பட்டுள்ளது.

கடுமையான பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இலங்கையில் மருந்து, எரிவாயு, எரிபொருள், உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

பெற்றோல் மற்றும் டீசல் பற்றாக்குறையால் வணிகம், போக்குவரத்து சேவைகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன என்று பிரித்தானிய வெளிநாட்டு பொதுநலவாய அலுவலகம் மற்றும் இலங்கைக்கான நியூசிலாந்து தூதரகம் ஆகியவை தமது பிரஜைகளிடம் அறிவித்துள்ளன.

நாளாந்தம் மின் தடைப்படுவதன் காரணமாக வன்முறை, அமைதியின்மை மற்றும் போராட்டங்களுக்கு வழிவகுக்கிறது.

வீதி மறியல்கள், போராட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் மிகக் குறுகிய காலத்தில் நடக்கலாம் என்று குறித்த நாடுகள் வெளியிட்டுள்ள பயண ஆலோசனையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# 10ஆம் மாத நினைவஞ்சலியும் 67ஆவது பிறந்த தின நினைவும்

அமரர்

## தனபாலசிங்கம் இலங்கைநாயகி



தோற்றம்: 07.07.1955
மறைவு: 14.09.2021

பத்து மாதம் பறந்தனவே
பாரில் உமை நாம் பிரிந்து
கத்துகிறோம் கதறுகிறோம்
கவலையுடன் நாங்களின்று
எத்துணையும் நீயெனவே
எங்களுக்காய் இருந்தவளே
நித்திலத்தில் உன் நினைவில்
நித்தியமும் வாடுகின்றோம்
பத்துத் திங்களென்ன
பத்தாயிரம் திங்கள் கடந்தாலும்
எமைவிட்டு நீங்காது
உம் நினைவு தாயே.
*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

352, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(1ம் வட்டாரம் மண்டைதீவு.)

என்றுமே பிரிவுத் துயரில்:-
கணவர் சோ.தனபாலசிங்கம்
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்

(12078)

# போலி நாணயங்கள் சமூகத்தில் புழக்கம்

## அவதானமாக இருக்குமாறு எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

பல போலி நாணயத்தாள்கள் சமூகத்தில் புழக்கத்தில் உள்ளதாக தெரியவருகின்றது.

யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட மாகாணத்தில் இவ்வாறான போலி நாணயங்கள் புழக்கத்தில் உள்ளன.

குறிப்பாக 5 ஆயிரம் ரூபாய் நாணயத்தாளே இவ்வாறு அதிகளவாக புழக்கத்தில் உள்ளமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறும் எச்சரிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# எரிபொருள் வரிசையில் உயிருக்குப் போராடியவரை

## காப்பாற்றிய பொதுமக்கள்

(கொழும்பு)

இலங்கையில் எரிபொருளுக்கான நீண்ட வரிசையில் காத்திருக்கும் மக்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் அதிகரித்து வருகிறது.

இந்நிலையில் எரிபொருள்நிரப்பு நிலையம் ஒன்றில் வரிசையில் காத்திருந்த நபர் நேற்று உயிருக்கு போராடியுள்ளார்.


முழுமையாக மூச்சுப் பேச்சின்றி கிடந்த நபரை அவதானித்த அங்கிருந்த மக்கள் அவருக்கு உடனடி முதலுதவி வழங்கி காப்பாற்றியுள்ளனர்.

இது தொடர்பான காணொளி ஒன்று சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கேதீச்சர பெருமானின் மஹாகும்பாபிஷேகம்













# தாய் நாட்டின் வீழ்ச்சியை தடுக்க

# நாடளாவிய ரீதியில் போராட்டங்களை நடத்துவோம்

## இலங்கை மருத்துவ நிபுணர்கள் அமைப்பு அழைப்பு

(கொழும்பு)

**தற்போதைய நெருக்கடி நிலையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோர் உடனடியாகப் பதவி விலகி சர்வகட்சி இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பதற்கு இடமளிக்கவேண்டும் என இலங்கை மருத்துவ நிபுணர்கள் அமைப்பு வலியுறுத்தியுள்ளது.**

ஆட்சியாளர்கள் இக்கோரிக்கைக்கு செவிசாய்க்காவிடின் எம்து தாய்நாட்டின் வீழ்ச்சியைத் தடுப்பதற்காக நாடளாவிய ரீதியில் முழுமையான தொழிற்சங்க நடவடிக்கை மற்றும் பாரிய அமைதிப் போராட்டங்களை நடத்துவது குறித்து சிந்திக்குமாறு தொழில வல்லுநர்கள், அரசியல் கட்சிகள் உள்ளிட்ட சகல தரப்பினரிடமும் வேண்டுகோள் விடுப்பதாகவும் அவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

நாட்டின் தற்போதைய நிலைவரம் குறித்து வெளியிட்டிருக்கும் அறிக்கையிலேயே மருத்துவ நிபுணர்கள் அமைப்பு மேற்கண்டவாறு வலியுறுத்தியுள்ளது. அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது,

நாம் தற்போது எமது நாட்டின் வரலாற்றிலேயே மிகமோசமான பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துக் கின்றோம். இதனைவிடவும் மோசமான நெருக்கடிக்கு முகங்கொடுக் கவிருக்கின்றோம். இவ்வாறானதொரு சூழ்நிலையில் மருத்துவ நிபுணர்களான நாம் நாட்டுமக்களுக்கு சிறந்த சுகாதாரசேவைப் பெற்றுக் கொடுப்பதில் பாரிய சவால்களை எதிர்கொண்டிருக்கின்றோம்.

நாம் மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் மக்களின் உயிரைப் பாதுகாப்பதற்கு வெகுவாக முயற்சி செய்கின்ற சூழ்நிலையில் இதனை சீர் செய்வதற்காகவன்றி, எரிபொருள் தட்டுப்பாட்டுப் பிரச்சினையைத் தமக்கு சாதகமாக்கி, மக்களின் கவனத்தைத் திசை திருப்புவதற்கு "பிரித்தாளும் உத்தியை" ஆட்சியாளர்கள் கையாள்வதை நாம் உணர்ந்திருக்கின்றோம்.

எரிபொருள் உள்ளடங்கலாக எந்தவொரு அத்தியாவசியப்பொருளுக்கேனும் தட்டுப்பாடு நிலவும் பட்சத்தில் அதன் விநியோகமானது நாட்டுமக்களுக்கு உச்சளவில் பயனளிக்கக்கூடிய விதத்தில் இடம்பெற வேண்டுமே தவிர, அது சமூகங்களுக்கு இடையில் பிளவுகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் அமையக்கூடாது.

அந்தவகையில் தற்போதைய நெருக்கடி தீர்வுகாணப் படமுடியாததாக மாற்றமடைவதற்கு முன்னதாக இந்நெருக்கடிக்கு நடைமுறைக்கு ஏற்றவகையில் தீர்வுகாண்பதை நோக்கி அரசாங்கத்தை வழிநடத்த வேண்டிய பொறுப்பு பொதுமக்கள் அனைவருக்கும் இருக்கின்றது என அவ் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய அணியை வீழ்த்தியது இங்கிலாந்து



இங்கிலாந்து – இந்திய அணிகளுக்கிடையிலான 5 ஆவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி கடந்த முதலாம் திகதி ஆரம்பமானது.

இந்திய அணி 2-1 என்ற கணக்கில் இந்த டெஸ்ட் தொடரில் முன்னிலையில் இருந்த நிலையில் தொடரை வெல்லும் முனைப்பில் இந்த போட்டியில் இந்திய அணி களமிறங்கியது.

இப்போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற இங்கிலாந்து அணி களத்தடுப்பில் ஈடுபட தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாட களமிறங்கிய இந்திய அணி தனது முதல் இன்னிங்சில் 416 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

அதிகபட்சமாக ரிஷப் பண்ட் 146 ஓட்டங்களையும், ரவிந்திர ஜடேஜா 104 ஓட்டங்களையும் குவித்தனர்.

இங்கிலாந்து அணி தரப்பில் ஆண்டர்சன் அதிகபட்சமாக 5 விக்கெட்டுகளை கைப்பற்றினார்.

இதனைத் தொடர்ந்து முதல் இன்னிங்சை ஆரம்பித்த இங்கிலாந்து அணி அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 284 ஓட்டங்களை பெற்றுக்கொண்டது.

பேர்ஸ்டோவ் அதிகபட்சமாக 106 ஓட்டங்களை குவித்தார். இந்திய அணி தரப்பில் முகமது சிராஜ் அதிகபட்சமாக 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து 132 ஓட்டங்கள் முன்னிலை பெற்ற நிலையில் இந்திய அணி தனது இரண்டாவது இன்னிங்சை தொடங்கியது. 2ஆவது இன்னிங்சில் 245 ஓட்டங்களை மாத்திரமே எடுத்தது.

இதனைத் தொடர்ந்து 378 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் இங்கிலாந்து அணியின் தொடக்க வீரர்களாக அலெக்ஸ் லீஸ் மற்றும் ஜாக் க்ரூவ்லி களமிறங்கினர். இரு வீரர்களும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். ஜாக் க்ரூவ்லி 46 ஓட்டங்களை பெற்றிருந்த நிலையில் ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த ஜோ ரூட் மற்றும் ஜொனி பேர்ஸ்டோவ் பொறுப்பான மற்றும் அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இருவரும் அரை சதம் கடந்தனர்.

நான்காம் நாள் ஆட்ட நேர முடிவில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுகள் இழப்பிற்கு 259 ஓட்டங்களை குவித்திருந்தது.

ஜோ ரூட் 76 ஓட்டங்களுடனும், பேர்ஸ்டோவ் 72 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். இந்தநிலையில் நேற்று முன்தினம் 5ஆவது நாள் ஆட்டம் ஆரம்பமானது. ஜோ ரூட் பேர்ஸ்டோவ் ஜோடியை பிரிக்க முடியாமல் இந்திய பந்துவீச்சாளர்கள் திணறினர். தொடர்ந்து சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்திய பேர்ஸ்டோவ்- ஜோரூட் சதம் அடித்து அசத்தினர். இறுதியில் இங்கிலாந்து அணி 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து 378 ஓட்டங்களை எடுத்து வெற்றி பெற்றது. இதனால் 7 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி 2-2 என்ற கணக்கில் இந்த தொடரை சமன் செய்துள்ளது. (4)

# விம்பிள்டன் டென்னிஸ், அரையிறுதிக்குள் ஜோகோவிச்



கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் ஒன்றான விம்பிள்டன் டென்னிஸ் லண்டனில் நடைபெற்று வருகிறது..

இதில் ஆண்கள் ஒற்றையர் பிரிவு காலிறுதி சுற்று போட்டியில் உலகின் முதல் நிலை வீரரான செர்பியாவின் நோவக் ஜோகோவிச், இத்தாலியின் ஜானிக் சின்னருடன் மோதினார்.

இதில் முதல் இரு செட்களை 7-5, 6-2 என சின்னர் கைப்பற்றினார். இதையடுத்து சுதாரித்துக் கொண்ட ஜோகோவிச் அதிரடியாக ஆடி 6-3, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் அடுத்த 3 சுற்றுகளை வென்றார்.

இதன்மூலம் ஜோகோவிச் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறினார்.

மற்றொரு காலிறுதி சுற்றில் பெல்ஜியத்தின் டேவிட் கோபின், அமெரிக்கா வின் கேமரூன் நூரியுடன் மோதினார்.

இதில் இருவரும் தலா 2 செட்களைக் கைப்பற்றினர். வெற்றியாளரை நிர்ணயிக்கும் இறுதி செட்டை நூரி கைப்பற்றினார்.

இதன்மூலம் 3-6, 7-5, 2-6, 6-3, 7-5 என்ற செட் கணக்கில் வென்ற நூரி அரையிறுதிக்கு முன்னேறினார்.

அரையிறுதியில் நூரி உலகின் முதல் நிலை வீரரான ஜோகோவிச்சை எதிர்கொள்கின்றார். (4)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2658

### வராகன்

சர்வதேச அளவிலான ஒட்டப் பந்தயம் இன்னும் சற்று நேரத்தில தொடங்கவிருக்கின்றது



### சயிந்தினி

கற்றோருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு




### பிரதாப்

அவங்கள் டோக்கன் தந்தது Petrol அடிக்க இல்லடா உங்கட தொல்லை தாங்க முடியாம வீட்ட அனுப்புறதுக்கு



### திவ்யா




### துளசிகன்

மற்றவர்களிடம் இருப்பவை
எல்லாம்
நம்மிடம் இருக்கின்றனவா
என்று
பார்க்கின்றோமே
தவிர நம்மிடம்
இருப்பவை எத்தனை
பேரிடம் இல்லை
என்பதை பார்க்கத்
தவறிவிடுகின்றோம்.

### அபி

சொத்து ஏதாவது வாங்கினால் மனைவி, பிள்ளைகள் பெயர்லேயும்




கடன் வாங்கினா அத தன் பெயர்லேயும் வாங்குவார் "அப்பா"

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடிநீர் குழாய்கள் பொருத்துவதற்காக வெட்டப்பட்ட குழிகள் ஆபத்தான நிலையில்



(கண்டாவளை)

கிளிநொச்சி கோணாவில் மற்றும் யூனியன் குளம் ஆகிய பகுதிகளில் குடிநீர் குழாய்கள் பொருத்துவதற்காக வெட்டப்பட்ட குழிகள் கடந்த ஆறு மாதங்களுக்கும் மேலாக மூடப்படாத நிலையில் பாதுகாப்பற்று ஆபத்தாக காணப்படுவதனால் இப்பகுதியில் விபத்துக்கள் ஏற்படுவதாகவும், இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறு காணப்படுகின்ற குழிகளில் பலர் விபத்துக்குள்ளாகி வருகின்றனர். குறிப்பாக சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், வயோதிபர்கள் தினமும் பயணிக்கின்ற குறித்த வீதிகளில் இவ்வாறு பாரிய குழிகள் வெட்டப்பட்டு மிக ஆபத்தானவையாக காணப்படுகின்றன.

அத்துடன் பல இடங்களில் வீதிகள் துண்டாடப்பட்ட நிலையிலும் காணப்படுகின்றன. எனவே இந்த விடயங்கள் தொடர்பில் உரிய தரப்புகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(4-6-315)


## 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

### அமரர். செல்வராணி சகாதேவன்

(1952 - 2022)

(ஓய்வுநிலை அதியர் யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)



அவர்களின் 31ம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று 07.07.2022 வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்றது என்பதனை அறியத்தருவதுடன் கடந்த 07.06.2022 அன்னாரின் திடீர் மறைவால் துயருற்றிருந்த எங்களுக்கு பக்கபலமாக நின்ற உறவினர் நண்பர்களுக்கும், தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் மூலமாக எமக்கு ஆறுதல் கூறி உதவியவர்களுக்கும் பத்திரிகை அறிவித்தல், பதாகைகள், மலர்வளையங்கள் மற்றும் மலர் மாலைகள் வழங்கிய அனைவருக்கும், வைத்தியசாலையில் அவரின் நிலையை சரியாக புரிய வைத்து ஆறுதல் படுத்திய வைத்திய நண்பர்களுக்கும் மற்றும் பராமரித்த ஏனைய வைத்தியர்கள், வைத்திய தாதியர்களுக்கும் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை சார்பில் பாடசாலைக் கொடியை அவரின் புகழுடலுக்கு அணிவித்து இறுதி மரியாதை செலுத்திய அதிபர், பாடசாலை சமூகத்தினர் மற்றும் மழலைகளுக்கும், அஞ்சலி உரைகளை வழங்கிய கல்விசார் உத்தியோகத்தர்கள், நண்பர்களுக்கும், இறுதி ஊர்வலத்தில் முழுமையான பங்கெடுத்த பரீட்சைகள் கிளை நண்பர்கள், குடும்ப நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும், ஏனைய பல வழிகளிலும் உதவி புரிந்த பிரதேச செயலக நண்பர்களுக்கும் ஏனைய நல்லுள்ளங்களுக்கும் எமது குடும்பம் சார்பாக இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றோம்.

"செல்வநிலாவகம்"
47, புகையிரத நிலைய வீதி,
கொக்குவில்.

(12046)

குடும்பத்தினர்.


# வெறிச்சோடி காணப்படும் முறிகண்டி ஆலய சூழல்

## வர்த்தகர்கள் பாதிப்பு



(கண்டாவளை)

பொருளாதார நெருக்கடியால் ஏ9 வீதியில் அமைந்துள்ள திருமுறிகண்டி பிள்ளையார் கோவில் சூழலில் அன்றாடம் வாழ்வாதார தொழில் மேற்கொண்டு வாழும் பலரது வாழ்வு பாதிக்கப்பட்டுள்ளது.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக ஏ9 வீதியுடான போக்குவரத்துக்கள் பாரியளவில் வீழ்ச்சி கண்டுள்ளது. தற்போது போக்குவரத்து செய்பவர்களின் எண்ணிக்கை மிக மிக அரிதாகவே காணப்படுகிறது. இதனால் தமது வாழ்வாதாரம் முற்றாகவே பாதிக்கப்பட்டுள்ளதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

முன்பு களைகட்டி காணப்பட்ட இப்பிரதேசம் இன்று மக்கள் நடமாட்டம் அற்ற ஒரு பிரதேசமாக காணப்படுகின்றது. அதாவது வடக்கிலிருந்து தெற்கிற்கும் தெற்கிலிருந்து வடக்கிற்கும் பயணிக்கும் பயணிகளில் ஒவ்வொருவரும் முறிகண்டி ஆலயத்தை தரிசிக்காது அல்லது அங்கே இளைப்பாறாது சென்றதாக வரலாறுகள் இல்லை. ஆனால் இன்று வெறிச்சோடி காணப்படுகின்ற பிரதேசமாக காணப்படுகிறது என மேலும் தெரிவித்துள்ளனர். (4-6-315)

# இராசிபலன்

07.07.2022
ஆனி 23, வியாழக்கிழமை
அட்டமி பிற்பகல் 2.55 மணிவரை

அத்தம் முற்பகல் 8.44 மணிவரை
சுபநேரம் 7.28-8.58 மணிவரை
இராகுகாலம் 1.28-2.58 மணிவரை

சந்திராஷ்டமம் - பூரட்டாதி

வளவன்




ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நல்லவர்களின் அறிவுரையும் ஆதரவும் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி அதிகரிக்கும், கௌரவமான நாள்.




வியாபார விருத்திக்கு வித்திடுவீர்கள், பொது நல ஈடுபாட்டால் புகழ் பெறுவீர்கள், கனிவாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.




மாற்றங்களால் ஏற்றம் பெறுவீர்கள், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், சுபகாரியச் செலவுகளில் ஆர்வம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.




ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள்.




பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், கல்யாணக்கனவு நனவாகலாம்.




குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், பேச்சில் இனிமை பிறக்கும், எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், சான்றோர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.




மற்றவர்களிடம் பேசும் போது நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது, கடவுளை வழிபட்டுக் காரியம் தொடங்க வேண்டிய நாள், வீண் விரயங்கள். அதிகரிக்கும் நாள்.




பொதுக் காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், வருமானம் திருப்தி தரும், தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும்.




பணத் தேவைகள் கடைசி நேரத்தில் பூர்த்தியாகும், வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், கற்பனை மிகுதியான நாள்,பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.




வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், செய்தொழில் மேன்மையுண்டு.




குடும்பத்தினரிடையே அந்நியோன்னியம் அதிகரிக்கும், ஆன்மீகச் சிந்தனை மேலோங்கும் நாள், காரிய அனுகூலமுண்டு, வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

ஆராய்ந்து நட்பு கொள், நட்பு கொண்ட பிறகு ஆராயாதே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரணி மருத்துவமனைக்கு
## எரிபொருள் கிடைக்கப்பெறாமையால் அம்புலன்ஸ் சேவை முடக்கம்

(சாவகச்சேரி)

வரணி பிரதேச மருத்துவ மனையின் நோயாளர் காவு வண்டிக்கான எரிபொருள் கிடைக்கப்பெறாமையால் நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைப்பதற்கு பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருவதாக பொதுமக்கள் மற்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நோயாளர் காவு வண்டிக்கான எரிபொருள் முற்றாகத் தீர்ந்துள்ள நிலையில் வரணி மருத்துவமனையில் அனுமதிக்கப்படும் கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் விபத்து நோயாளர்களை மேலதிக சிகிச்சைக்காக சாவகச்சேரி மருத்துவமனை மற்றும் யாழ். போதனா மருத்துவமனைகளுக்கு மேலதிக சிகிச்சைக்காக அனுப்பி வைப்பது முற்றாகத் தடைப்பட்டிருப்பதாகவும், எதிர்வரும் தினங்களிலும் அம்புலன்ஸ்கான எரிபொருள் கிடைக்கப்பெறாவிட்டால் இந் நிலை தொடரும் எனவும் மருத்துவமனை வட்டாரங்கள் சுட்டிக் காட்டியுள்ளன. (4-6-30)



திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தில் சைவப் பெருவள்ளளார் சேர்.பொன்.இராம நாதனால் உருவாக்கப்பட்ட ஸ்ரீ பார்வதி சமேத பரமேஸ்வரப் பெருமானின் மஹா கும்பாபிஷேகம் நேற்றுப் புதன்கிழமை காலை 6 மணி முதல் காலை 7 மணி வரையான சுபமுகூர்த்த வேளையில் சிறப்பாக நடைபெற்றது. (படம்:-ரவிசாந், சிவசாந்தன்)

## வவுனியாவில் புதையல் தேடிய ஒன்பது பேர் கைது

(குருமன்காடு)

வவுனியா நாகர் இலுப்பைக் குளம் பகுதியில் புதையல் தேடும் முயற்சியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் மாலை 9 நபர்களை வவுனியா பொலிஸார் கைது செய்துள்ளதுடன், குறித்த நடவடிக்கைக்கு பயன்படுத்திய ஸ்கானர் இயந்திரம் மற்றும் வான் ஆகியவற்றினையும் கைப்பற்றியுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த பகுதியில் சந்தேகத்திற்கிடமாக பலர் நிற்பதாக இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்தே வவுனியா பொலிஸாரால் குறித்த சுற்றி வளைப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட நபர்களிடம் மேற்கொள்ளப்படும் மேலதிக விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர்கள் மற்றும் ஸ்கானர் இயந்திரம், வாகனம் ஆகியவற்றினையும் வவுனியா நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாக வவுனியா பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (4-6-250)

## மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

சரசாலை இலந்தைத்திடல் அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோயில் வருடாந்த மஹோற்சவம் நேற்று காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்து நாட்கள் இடம்பெறவுள்ள மஹோற்சவத்தில் எதிர்வரும் 14 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம் பெறவுள்ளன. (4-6-33)

## ஆஸி.செல்ல முற்பட்ட நால்வர் தொண்டமானாறில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தொண்டமனாறு பகுதியில் இருந்து, படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்ட குற்றச்சாட்டில் நான்கு பேர் இராணுவத்தினரால் நேற்று புதன்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

வவுனியாவைச் சேர்ந்த இருவரும் திருகோணமலையைச் சேர்ந்த இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

தொண்டமனாறு இராணுவச் சோதனைச் சாவடிக்கு அண்மையாக அதிகாலையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடிய நால்வரையும் இராணுவத்தினர் விசாரணை நடத்திய போதே அவர்கள் படகு மூலம் அவுஸ்திரேலியா செல்ல முற்பட்டமை தெரியவந்தது.

படகு ஒன்றுக்கு தலா 3 இலட்சம் ரூபாய் வீதம் பணம் செலுத்தியதாக அவர்கள் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களை வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (4-6-18-33-60)

## மோட்டார் வாகன போக்குவரத்து சேவைகள்
### ④நாட்கள் இடம்பெறும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் சேவைகள் தற்போதைய நெருக்கடி நிலைமைகளை கருத்தில் கொண்டு வாரத்தின் திங்கள், செவ்வாய் மற்றும் புதன் ஆகிய மூன்று நாட்கள் மட்டுமே இடம்பெற்று வந்தது.

இந்நிலையில் சேவைகள் இந்த வாரம் தொடக்கம் திங்கள், செவ்வாய், புதன் மற்றும் வியா ழன் ஆகிய நாட்களில் வழமை போல இடம்பெறும் எனவும் குறிப்பிட்ட நாட்களில் சேவை பெறுநர்கள் சேவைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-6-18-33)

## மன்னாரில் கரடி கடிக்கு இலக்காகி பலர் மருத்துவமனையில்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் உள்ள வட்டுப்பித்தான் மடு, நானாட்டான், வங்காலை போன்ற பகுதிகளில் அண்மைய நாட்களாக கரடி ஒன்றின் அட்டகாசம் அதிகரித்துள்ள நிலையில் பலர் கரடி கடிக்கு இலக்காகியுள்ளனர்.

அதில் ஒருவர் பலத்த காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

தொடர்ச்சியாக குறித்த கரடியின் தாக்குதல் சம்பவம் இடம் பெற்று வருகின்ற நிலையில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் எரிபொருள் பிரச்சினை காரணமாக கரடியை பிடிக்க முடியாத நிலை காணப்படுவதாக தெரிவிக்கின்றனர்.

தொடர்ந்து இரவு நேரங்களில் கரடி மக்கள் வசிக்கும் பகுதிகளுக்குள் நுழைவதாகவும் அதிகாலை நேரங்களில் நடமாடும் மக்களை தாக்குவதாகும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

மன்னார் பொது மருத்துவமனையில் மிருக கடிக்குரிய மருந்து தட்டுப்பாடு நிலவி வருகின்ற நிலையில் தொடர்ச்சியாக இக் கரடி மக்கள் வசிக்கும் பகுதிக்கு சென்று மக்களை தாக்குவது மக்கள் மத்தியில் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

எனவே வனஜீவராசிகள் திணைக்களத்தினருக்கான எரிபொருளை வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொண்டு கரடியை பிடிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-285)

## இந்தியா செல்ல முயன்ற 7 பேர் மன்னாரில் கைது

(மன்னார்)

மன்னார் தாழ்வுபாடு கடற்கரையில் இருந்து படகு மூலம் இந்தியா செல்ல முயற்சித்த 2 குடும்பங்களைச் சேர்ந்த 7 பேர் உள்ளடங்களாக 9 பேர் கடற்படையினரால் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு தாழ்வுபாடு கடற்கரை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா மற்றும் புதுளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என தெரிய வருகின்றது. கைது செய்யப்பட்டவர்களில் ஒரு பெண், சிறுவன், சிறுமி உள்ளடங்களாக 7 பேரும் மன்னாரைச் சேர்ந்த 2 படகோட்டிகளும் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் கடற்படையினரால் மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் மன்னார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர். (4-6-285)

## உலர் உணவு வழங்கல்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரம் ஜே/29 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள புங்குடுதீவு மேற்கு குறிகாட்டுவான் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் 8 ஆம் திருவிழா நாளை வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் திருவிழா உபயகாரர்களால் காலை 10-11 மணியளவில் ஜே/29 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்குட்பட்ட மக்களுக்கு உலருணவு வழங்கல்நிகழ்வும்இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் வேலணை பிரதேச செயலாளர் பிரணவன், ஜே/29 கிராம உத்தியோகத்தர் பிரியலக்சன், சம்பத் வங்கி யாழ்.மாவட்ட பிராந்திய முகாமையாளர் இ.குமணன், தச்சன் தோப்பு கந்தையா கனகம்மா நிதிய நிறுவுனர் க.மயில்வாகனம், ந.கிருஷ்ண பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)

## தொடர் சைக்கிள் திருட்டில் ஈடுபட்டவர் மடக்கிப்பிடிப்பு

(கரணவாய்)

துவிச்சக்கர வண்டி திருட்டில் இரண்டாவது தடவையாகவும் ஈடுபட்ட கரவெட்டி மேற்கை சேர்ந்த நபர் ஒருவர் மடக்கி பிடிக்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

அண்மையில் நெல்லியடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ... ன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த துவிச்சக்கர வண்டி மதியம் காணாமல் போயிருந்தது. வீட்டின் உரிமையாளர் கண்காணிப்பு கமரா உதவியுடன் துவிச்சக்கர வண்டியை திருடியவர் கரவெட்டி மேற்கில் உள்ளவர் என் பதை உறுதி செய்து தொண்... பின்னர் திருடியவர் வீட்டுக்கு சென்று கேட்டுள்ளார்.

குற்றத்தை ஒப்புக்கொண்டவர் குறித்த துவிச்சக்கர வண்டியை கோப்பாயில் 7000 ரூபாவிற்கு விற்பனை செய்துள்ளமை தெரிய வந்துள்ளது.

தொடர்ந்து பல்வேறு முயற்சிக்கு பின்னர் நேற்று முன்தினம் உரிமையாளரிடம் துவிச்சக்கர வண்டி ஒப்படைக்கப்பட்டது.

அதே நபர் நேற்று முன்தினம் உடுப்பிட்டி பகுதியில் தமது கைவரிசையை காட்டிய போது கிராம உத் தியோகத்தரால் பிடிக்கப்பட்டு வல்வெட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார். (4-6-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புதிய திரிபு பரவும் அபாயம்
# 4 தடுப்பூசிகளும் கட்டாயம்
## சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்து

(கொழும்பு)

**"புதிய திரிபு கொரோனா வைரஸ் இலங்கையிலும் பரவும் அபாயம் உள்ளதால், 4 தடுப்பூசிகளையும் உரிய வகையில் செலுத்திக்கொள்வதே, அதிலிருந்து விடுபடுவதற்கான சிறந்த வழியாகும்" என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது.

"தடுப்பூசியை சகல அரச மருத்துவமனைகள், சுகாதார மருத்துவ அதிகாரி காரியாலயங்கள் மற்றும் பெயரிடப்பட்டுள்ள தடுப்பூசி மையங்களிலும் செலுத்திக்கொள்ள முடியும்.

கொரோனா 4 ஆம் தடுப்பூசியைச் செலுத்திக்கொள்வதன் ஊடாக வைரஸ் தொற்றின் பாதிப்பைக் குறைத்துக்கொள்ள முடியும் என்பதுடன், மரணம் ஏற்படும் அபாயத்திலிருந்து விடுபடவும் முடியும்" என அவர் தெரிவித்தார். (நி)



# பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பதவி விலக வேண்டும்
## அமைச்சர் தம்மிக்க

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிதியமைச்சர் பதவியில் இருந்து விலக வேண்டும் என அமைச்சர் முதலீடு மற்றும் ஊக்குவிப்பு அமைச்சர் தம்மிக்க பெரேரா கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையின் நிதியமைச்சர் பேரழிவிற்குத் திட்டமிட்டுள்ளார் என சாடியுள்ள அவர், தற்போதைய டொலர் நெருக்கடியை தீர்க்க நிதி அமைச்சரிடம் எந்த திட்டமும் இல்லை என்றும் தெரிவித்தார்.

தற்போதைய நிதி அமைச்சராக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)



# சுகாதார சீர்கேடுகளுடன் மலசலகூடம்

(கரணவாய்)

நெல்லியடி நகரப்பகுதியில் அமைந்துள்ள மலசலகூடம் ஒன்று சுகாதார சீர்கேடுகளுடன் காணப்படுகின்றதாக பொதுமக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இதனால் அப்பகுதி ஊடாகப் போக்குவரத்து செய்கையில் அசௌகரியங்களை சந்திப்பதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். உடனடியாக வடமராட்சி தெற்கு-மேற்கு பிரதேச சபை உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும் இல்லாவிட்டால் மூடப்பட வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (4-6-60)

# இலங்கை அகதிகளை மீட்க
## தனுஷ்கோடியில் படகுகளை நிறுத்துங்கள்
## இந்திய மீனவர்கள் கோரிக்கை

(சென்னை)

இலங்கையிலிருந்து வரும் அகதிகளைப் பாதுகாப்பாக மீட்க தனுஷ்கோடியில் கரையோரப் பொலிஸாரின் ரோந்துப் படகுகளை நிறுத்த வேண்டும் என இந்திய மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள கடுமையான பொருளாதார நெருக்கடியால் அகதிகளாக வரும் பெரும்பாலானோர் தனுஷ்கோடி அருகே உள்ள மணல் தீடைகளில் இறங்குகின்றனர்.

இந்த நிலையில், கரையோரப் பொலிஸாருக்குச் சொந்தமான படகுகள், தனுஷ்கோடியில் ரோந்து செல்லவும், இலங்கையிலிருந்து வரும் அகதிகளைப் பாதுகாப்பாக மீட்கவும் தனுஷ்கோடி இறங்கு தளத்தில் நிறுத்தப்பட வேண்டும் என்று இந்திய மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் இந்தியாவில் தஞ்சமடைபவர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-6)


# அமைச்சுப் பதவியிலிருந்து தற்காலிகமாக விலகினார் நிமல்

(கொழும்பு)

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா அமைச்சுப் பதவியிலிருந்து விலகுவதாக ஜனாதிபதியிடம் கடிதம் கையளித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

தன் மீதான இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுகள் தொடர்பிலான பக்கசார்பற்ற சுயாதீனமான விசாரணைகள் முடியும் வரையில் அமைச்சுப் பதவியில் இருந்து விலகுவதாக அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

துறைமுக மற்றும் விமான போக்குவரத்து அமைச்சராக நிமல் சிறிபால டி சில்வா பதவி வகித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)




# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம் 1<br>கி.பா: சூரி 10 செவ் 5 இல்<br>உயரம்:5' 5"<br>தகைமை/தொழில்:CTB டிக்கெட் செக்கர்<br>எதிர்பார்ப்பு:அரச தொழில்<br>தொ.இ: B/10141 | பிறப்பு: 1991 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம் 4<br>கி.பா: 9 சூரி 8 செவ் 11 இல்<br>உயரம்:5' 7"<br>தகைமை/தொழில்:Civil Engineering - India Civil Engineer<br>எதிர்பார்ப்பு: Engineer<br>தொ.இ:G/10540 |
| பிறப்பு: 1990 இந்து<br>நட்சத்திரம்:சித்திரை 1<br>கி.பா:சூரி 8 செவ் 3 இல்<br>உயரம்:5' 10"<br>தகைமை/தொழில்: வங்கி உத்தியோகத்தர் (தனியார்)<br>எதிர்பார்ப்பு:படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10146 | பிறப்பு: 1995 கிறிஸ்தவம்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்:BA பட்டதாரி<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/10548 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: மூலம் 4<br>கி.பா:16 ¾ சூரி 6 செவ் 9 இல்<br>தகைமை/தொழில்: O/L கிறைசர் முதலாளி<br>எதிர்பார்ப்பு: படித்த பெண் உள்நாடு மட்டும்<br>தொ.இ: B/10158 | பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை 3<br>கி.பா: 89 சூரி 11 செவ் 7 இல்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: நிரந்தர வேலையுள்ள மண மகன்<br>தொ.இ:G/10549 |
| பிறப்பு: 1969 இந்து<br>நட்சத்திரம் : உத்தரம் 4<br>கி.பா:29 ½ சூரி 6 செவ் 9 இல்<br>உயரம் :5' 7"<br>தகைமை/தொழில்: Customs officer<br>எதிர்பார்ப்பு :சாதாரண படித்த பெண்<br>தொ.இ: B/10161 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: அஸ்வினி 2<br>கி.பா:24 ¾ சூரி 3 செவ் 6 இல்<br>உயரம் : 158 cm<br>தகைமை/தொழில்:பட்டதாரி அபிவிருத்தி உத்தியோகத்தர்<br>எதிர்பார்ப்பு: படித்த நிரந்தர வேலை (அரச. தனியார் தொழில்)<br>தொ.இ:G/10567 |


கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1500 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 500 அறவிடப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 90

### பணம் இருக்கும் இடத்தில் குணம் இருப்பதில்லை



நெல்லிக்காய் விலை எவ்வளவு என ஒரு பெண் கேட்டாள்.

"காக் கிலோ 25 ரூபாய் அம்மா?" என்றார் ஒரு வயோதிப பெண்.

"சரி, அரைக் கிலோ நெல்லிக்காய் 40/- இற்கு கொடுப்பீங்களா?" என இரண்டு இருபது ரூபாய் நோட்டுகளை நீட்டினாள் அந்த பெண்.

"சரி அம்மா, நீ கேட்ட விலைக்கே தாரேன். காலையிலிருந்து ஒருத்தரும் வாங்க வரவில்லை உனக்குத்தான் முதல் வியாபாரம் செய்கிறேன். கடவுள் உன்னை நல்லா வைக்கட்டும்" என அந்த வயோதிப பெண் கூறினார்.

தான் கேட்ட விலைக்கு கிடைத்துவிட்ட நெல்லிக்காய்களை வாங்கிக் கொண்டு சந்தோஷத்துடன் அப்பெண் தனது காரில் தன் தோழியை அழைத்துக் கொண்டு ஒரு ஹோட்டலுக்கு சென்றாள்.

அவர்கள் இருவரும் ஹோட்டலில் அமர்ந்து பேசிக் கொண்டே தாங்கள் விரும்பியதை வாங்கிச் சாப்பிட்டனர். சாப்பிட்டது குறைவு, மீதம் விட்டது அதிகம்.

900 ரூபாய் பில் வந்தது. இந்த பெண் 1000 ரூபாவை ஹோட்டல் நிர்வாகியிடம் கொடுத்து "மீதி சில்லறையை நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்" என்றாள்.

ஹோட்டல் உரிமையாளருக்கு இது மிகச் சாதாரணம் விடயம். ஆனால் நெல்லிக்காய் விற்ற அம்மாவுக்கு வலி மிகுந்த விடயம்!


இதில் உற்று நோக்க வேண்டியது நாம் உதவி தேவைப்படும் ஏழைகளித்தில் ஏதேனும் வாங்கும்போது நம் பலத்தைக் காட்டுகிறோம். பணக்காரர்களிடமும், தேவைகளே இல்லாதவர்களிடமும் நாம் நம் தாராள குணத்தை காட்டுகிறோம்.

முதலில் நாம் மாறுவோம்.
சமுதாயத்தில் நல்ல மாற்றத்தினை உருவாக்குவோம்.



Bosco Thusha

## எண்ணெய்-எரிவாயு உற்பத்தியை மட்டுப்படுத்துகிறது நோர்வே



(நோர்வே)

ரஷ்யாவுடன் ஏற்பட்ட இடைவெளியைத் தொடர்ந்து மேற்கு நாடுகள் தற்போது நோர்வேயிடமிருந்து எண்ணெய் மற்றும் எரிவாயுக்களை பெறத் தொடங்கியுள்ள நிலையில் நோர்வே தனது உற்பத்தியை வெகுவாக குறைத்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உலகில் அதிகரித்து வரும் பணவீக்கம் மற்றும் வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு போன்வற்றை மையமாக கொண்டு நோர்வேயின் எண்ணெய் உற்பத்தி பணியாளர்கள் சம்பள உயர்வைக் கோரி தமது தொழிலை நிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

நோர்வேயின் எண்ணெய் உற்பத்தி வழமையை விட 13 வீதம் குறைந்துள்ளதாக அதாவது ஒரு நாளைக்கு 13,000 பீப்பாய்கள் எண்ணெய் உற்பத்தி குறைத்துள்ளதாகவும் இந்த உற்பத்தி நோர்வேயின் மொத்த நாள் உற்பத்தியில் 6.5 வீதம் என நோர்வே செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-6)

## வர்ணம் பூசப்படும் ஈபிள் கோபுரம்



(பாரிஸ்)

உலகில் அதிகம் பார்வையிடப்பட்ட சுற்றுலாத் தளங்களில் ஒன்றாக ஈபிள் கோபுரம் விளங்குகிறது. இந்த நிலையில் ஈபிள் கோபுரம் துருப்பிடித்து மோசமான நிலையில் இருப்பதாகவும், முழுமையான பழுதுபார்ப்பு தேவை என்றும் தகவல்கள் வெளியாகி உள்ளன.

ஆனால் பழுதுபார்ப்புக்கு பதிலாக ஈபிள் கோபுரம் வெறுமென வர்ணம் பூசப்படுவதாகவும் நிபுணர்கள் இரகசிய அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

2024 ஆம் ஆண்டு பாரிஸில் நடக்கவிருக்கும் ஒலிம்பிக் போட்டியையொட்டி 60 மில்லியன் யூரோ செலவில் ஈபிள் கோபுரம் வர்ணம் பூசப்பட்டு வருவதாகவும், ஈபிள் கோபுரத்தில் இப்படி மீண்டும் வர்ணம் பூசப்படுவது இது 20 ஆவது முறை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் ஈபிள் கோபுரத்தை பராமரித்து வரும் தனியார் நிறுவனம் இது குறித்து உடனடியாக எந்த கருத்தும் தெரிவிக்கவில்லை. (நி-6)

## 75 அம்புலன்ஸ்கள், 17 பேருந்துகள் நேபாளத்திற்கு வழங்கிய இந்தியா



(டில்லி)

இரு நாடுகளுக்கும் இடையிலான வலுவான மற்றும் நீண்டகால கூட்டாண்மையை கட்டியெழுப்புவதற்கும், இமயமலை தேசம் சுகாதார மற்றும் கல்வித் துறைகளில் அதன் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்குமாக நேபாளத்திற்கு 75 அம்புலன்ஸ் வண்டிகள் மற்றும் 17 பாடசாலை பேருந்துகளை இந்தியா பரிசாக வழங்கியது.

புதிதாக நியமிக்கப்பட்டுள்ள இந்திய தூதுவர் நவீன் ஸ்ரீவஸ்தவா, நேபாளத்தின் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் தேவேந்திர பவுடல் முன்னிலையில் வாகனங்களின் சாவியை கையளித்தனர்.

75 அம்புலன்ஸ்கள் பரிசாக வழங்கப்படுவது இந்தியா சுதந்திரம் அடைந்து 75 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் என்று இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

சுகாதாரம் மற்றும் கல்வியில் அதன் உட்கட்டமைப்பை வலுப்படுத்த நேபாள அரசாங்கத்தின் முயற்சிகளை மேம்படுத்துவதற்காக நேபாள-இந்தியா மேம்பாட்டுக் கூட்டுத் திட்டத்தின் கீழ் இந்திய அரசாங்கத்தின் நீண்டகால பாரம்பரியங்களில் இந்த முயற்சியும் ஒன்றாகும்.

2021 ஆம் ஆண்டில், கொவிட் -19 தொற்றுநோய்க்கு எதிரான போராட்டத்தில் காத்மாண்டுவுக்கு உதவும் முயற்சிகளின் ஒரு பகுதியாக, வென்டிலேட்டர்கள் பொருத்தப்பட்ட 39 அம்புலன்ஸ்களை இந்தியா நேபாளத்திற்கு பரிசளித்தது.

இதேபோல், 2020 ஆம் ஆண்டில், மகாத்மா காந்தியின் 151 வது பிறந்த நாளை முன்னிட்டு நேபாளத்திற்கு இந்தியா 41 அம்புலன்ஸ்கள் மற்றும் ஆறு பாடசாலை பேருந்துகளை பரிசாக வழங்கியமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுவீடன், பின்லாந்து ஆகிய நாடுகளை ரஷ்யா தாக்கினால் நேட்டோ தலையிடாது

## நேட்டோ அமைப்பின் உதவி பொதுச்செயலர் தெரிவிப்பு

**(பிரஸ்ஸல்ஸ்)**

**நேட்டோ கூட்டமைப்பில் அண்மையில் புதிதாக இணைந்து கொண்ட இரு நாடுகளான பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகியவற்றுக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினினால் ஆபத்து ஏற்படக் கூடும் என்ற எதிர்பார்ப்பு காணப் படுகின்றது.**

உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பு முடிவடைந்த பின்னர் புடின் மேற்படி நாடுகள் மேல் தாக்குதல் அல்லது படையெடுப்பு ஒன்றை மேற்கொள்ள முடியும் என்ற எதிர்வு கூறல்கள் பலமாக ஒலித்துக் கொண்டு இருக்கின்றதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கு காரணம் ரஷ்யாவின் விருப்பத்தை மீறி மேற்படி இரு நாடுகளும் நேட்டோ அமைப்பில் இணைந்து கொண்டமையாகும்.

நேட்டோ அமைப்பின் உதவி பொதுச் செயலாளர் 'மிர்சியா ஜியோனா' நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கும் போது. "புடின், பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகளுக்கெதிராக போர் ஒன்றினை தொடுப்பாராக இருந்தால் அதில் நேட்டோ எந்த விதத்திலும் தலையிடாது என்பதை தெரிவித்துக் கொள்கின்றது.

நேட்டோ தனது துருப்புக்களை அனுப்ப மாட்டாது. நேட்டோ தலையிடுமாக இருந்தால் அது சர்வதேச பிரச்சினையாக மாறிவிடும். எனவே பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் எதையும் எதிர்கொள்ள ஆயத்தமாக இருக்க வேண்டியது அவசியம்" என தெரிவித்திருந்தார். (நி-6)

# மியன்மார் எல்லையில் இரு தமிழர்கள் சுட்டுக்கொலை

(மியன்மார்)

மியன்மார் நாட்டில் செயற்படும் தீவிரவாதிகளால் 2 தமிழ் இளைஞர்கள் சுட்டுக்கொலை செய்யப்பட்டனர்.

முச்சக்கர வண்டி சாரதியான மோகன் (28 வயது) மற்றும் வியர்பாரியான அய்யனார் (35 வயது) ஆகிய இருவருமே சுட்டுக் கொலை செய்யப்பட்டவர்வர்களாவர்.பியூ ஷா தீ என்னும் ஆயுதம் ஏந்திய பயங்கரவாத குழுவினர் இவர்களைச் சுட்டுக் கொன்றதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

மியன்மார் எல்லையான டாமு என்ற பகுதியில் இவர்கள் இருவரின் சடலங்களும் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டன. இந்தப் படுகொலைகளை அடுத்து இந்தியா-மியன்மார் எல்லையில் உள்ள மோரே பகுதியில் பதற்றநிலை ஏற்பட்டுள்ளது. கடைகள் அடைக்கப்பட்டு இயல்பு வாழ்க்கை ஸ்தம்பித்துள்ளது. (நி-6)

# ஏமன் ஆயுதக் கிடங்கில் பயங்கர வெடி விபத்து

## 10 பேர் பலி, 60 பேர் காயம்

(ஏமன்)

ஏமன் நாட்டின் இராணுவத் தளத்தில் உள்ள ஆயுத சேமிப்பு கிடங்கில் நேற்று முன்தினம் இடம் பெற்ற பயங்கர வெடிவிபத்தில் 10 பேர் பலியானதுடன், 60 பேர் காயமடைந்தனர்.

தெற்கு ஏமன் - அபியான் மாகாணத்தில் உள்ள லாடார் நகரின் ஆயுதக் கிடக்கிலேயே இந்த வெடி விபத்து ஏற்பட்டது.

ஏமன் அரச படையினருக்கும், ஹவுதி கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே பல ஆண்டுகளாக சண்டை நீடித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

# நேட்டோவில் சுவீடன், பின்லாந்து இணைப்பு

## ஆவணத்தில் 30 நாடுகள் ஒப்பம்

(பிரஸ்ஸல்ஸ்)

நேட்டோவில் சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகளை இணைத்துக் கொள்வதற்கான நெறி முறை ஆவணத்தில் 30 நேட்டோ உறுப்பு நாடுகளும் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை கையொப்பமிட்டன.

அதையடுத்து, அந்த ஆவணம் உறுப்பு நாடுகளின் பாராளுமன்ற அனுமதிக்காக அந்த நாடுகளின் தலைநகரங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

இதையடுத்து, இது வரை அணிசாரா கொள்கைகளைக் கடைப்பிடித்து வந்த சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகள் நேட்டோ அமைப்பில் இணைவதற்கான நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.




நேட்டோவில் சுவீடன் மற்றும் பின்லாந்து நாடுகளை இணைத்து கொள்வதற்கான நெறிமுறை ஆவணத்தில் 30 உறுப்பு நாடுகளும் கையொப்பமிட்டுள்ளமையானது அந்த இரு நாடுகளுக்கும் மட்டுமன்றி நேட்டோவுக்கும் வரலாற்றுச் சிறப்புமிக்க தருணமாகும் என நேட்டோ அமைப்பின் பொதுச்செயலாளர் ஜென்ஸ் ஸ்டால்டன்பர்க் தெரிவித்துள்ளார்.

சுவீடனும், பின்லாந்தும் இணைவதன் மூலம் நேட்டோ அமைப்பு மேலும் பலம் பெறும்.

பல ஆண்டுகளுக்குப் பிறகு நாம் மிகப் பெரிய இராணுவ நெருக்கடியை எதிர்கொண்டுள்ள இந்த நேரத்தில் இரு நாடுகளையும் நேட்டோவில் இணைப்பது பிராந்திய மக்களின் பாதுகாப்புக்கு வழி வகுக்கும் எனவும் ஜென்ஸ் ஸ்டால்டன்பர்க் குறிப்பிட்டார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கால்நடை வளர்ப்பு தொடர்பான பொருளாதார இழப்பிற்கு வடக்கு நிர்வாகமே பொறுப்பு

## கால்நடை மருத்துவர் சங்கம் தெரிவிப்பு

(நெளுக்குளம்)

**நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியினால் கால்நடை மருத்துவர் சங்கத்தினர் பெரும் சிரமத்திற்குள்ளாவதாக வடக்குமாகாண கால்நடை மருத்துவர் சங்கத்தினால் நேற்றுமுன் தினம் ஊடக அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.**

குறித்த அறிக்கையில், நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் பற்றாக்குறை நிமித்தம் பண்ணையாளர்களிற்கான கால்நடை மருத்துவ சேவைகள் ஸ்தம்பிதம் அடைந்து காணப்படுகின்றது.

உணவுத்தேவையை கணிசமானளவு பூர்த்தி செய்யக்கூடிய கால்நடை உற்பத்தி பொருட்களான முட்டை, பால், விலங்கு இறைச்சிகளின் உற்பத்தியை உறுதிசெய்வதற்கு அத்தியாவசியமான கால்நடை உற்பத்தி சுகாதாரத் துறை அத்தியாவசிய சேவைகள் பட்டியலில் இடம்பெறாமல் போனது நாட்டில் உணவுப்பஞ்சத்தை மேலும் அதிகரிக்கும் செயலாகவே பார்க்க வேண்டியுள்ளது.

கால்நடை மருத்துவர்களுக்கும் அலுவலக உத்தியோகத்தர்களிற்கும் அலுவலக வாகனங்களிற்கும் எரிபொருளினை வழங்குவதற்கு எதுவித ஏற்பாடுகளும் செய்து தரப்படாமல் புறக்கணிக்கப்படுகின்றமை வருங்காலத்தில் பண்ணையாளர்களிற்கு சேவைகளினை வழங்க முடியாத சூழ்நிலையை உருவாக்கும்.

இந்நிலையில் வடக்குமாகாண அரச கால்நடை மருத்துவர்சங்கம், கால்நடை மருத்துவர்கள் வருங்காலத்தில் எரிபொருள் கிடைக்கும் பட்சத்தில் மாத்திரம் கடமைகளிற்கு சமூகமளிப்பதாக தீர்மானித்துள்ளது.

அத்துடன் எமது சேவைகளினை பெற முடியாத பண்ணையாளர்களிற்கு இக்காலத்தில் ஏற்படுகின்ற எல்லாவித அசௌகரியங்களிற்கும் கால்நடை உயிரிழப்பு மற்றும் உற்பத்தி இழப்புக்களிற்கும் ஏனைய கால்நடை வளர்ப்பு தொடர்பான பொருளாதார இழப்புக்களிற்கும் வடக்கு மாகாண நிர்வாக கட்டமைப்பே பொறுப்பேற்க வேண்டும் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (4-6-299)

# மன்னாரில் குருதி தட்டுப்பாடு

## இரத்ததானம் செய்யுமாறு பணிப்பாளர் கோரிக்கை

(மன்னார்)

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் இரத்த வங்கியில் குருதி தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள நிலையில், நாளை 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் இரத்த வங்கியில் விசேட இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் செந்தூர் பதிராஜா தெரிவித்தார்.

எனவே இரத்ததானம் செய்ய விரும்புபவர்கள் குறித்த இரத்ததான முகாமில் கலந்து கொண்டு இரத்ததானம் செய்து கொள்ள முடியும்.

மேலதிக தகவல்களுக்கு மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையின் இரத்த வங்கியுடன் தொடர்பு கொள்ளுமாறும் பணிப்பாளர் தெரிவித்தார். (4-6-285)

# முதியவரின் சங்கிலி அறுப்பு இரு இளைஞர்கள் கைது

(குருமன்காடு)

வவுனியாவில் திருட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய இரு இளைஞர்கள் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியில் கடந்த வாரம் வயது போன ஒரு முதியவர் துவிச்சக்கர வண்டியில் பயணித்த போது மோட்டர் சைக்கிளில் பின் தொடர்ந்து பயணித்த இளைஞர்கள் இருவர் அவர் அணிந்திருந்த சங்கிலியை அறுத்துச் சென்றனர். இது தொடர்பில் பாதிக்கப்பட்ட முதியவர் வவுனியா குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தார்.

குறித்த முறைப்பாடு தொடர்பில் விசாரணை செய்த பொலிஸார் குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா, தோணிக்கல் மற்றும் சிறிராமபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 33 மற்றும் 25 ஆகிய வயதுடைய இரு இளைஞர்களை கைது செய்துள்ளதுடன், பசார் வீதியில் உள்ள தனியார் நிதி நிறுவனம் ஒன்றில் அடைவு வைக்கப்பட்ட நிலையில் 6 அரைப் பவுண் சங்கிலியையும் மீட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் குறித்த இருவரையும் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தனர். (4-6-250)

# தனியார் பேருந்து சேவையினருக்கு டீசல் வழங்க நடவடிக்கை

## கிளி.அரச அதிபர்

(முறிகண்டி)

தமது சேவைக்கான எரிபொருளை இராணுவத்தினரின் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றுக் கொள்ள ஏற்பாடு செய்து தாருங்கள் என தனியார் பேருந்து சேவையினர் அரசாங்க அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நேற்று தனியார் பேருந்து உரிமையாளர்கள் முன்னெடுத்த போராட்டத்தின் போது மாவட்ட அரசாங்க அதிபரை சந்திக்க கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு சென்றிருந்தனர். இதன்போது தமது பிரச்சினை தொடர்பில் அரசாங்க அதிபரிடம் தனியார் பேருந்து சேவை உரிமையாளர்கள் தெரிவித்தனர்.


தமது சேவையை 50 வீதத்திற்கும் குறைவாக முன்னெடுப்பதாகவும், இந்த நிலையில் முறையான சேவையை வழங்க டீசலை பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

எமக்கான எரிபொருள் பெற்றுக்கொள்ள முறையான நடவடிக்கை ஒன்றை செய்து தாருங்கள். நாம் இராணுவத்தினரின் எரிபொருள் நிரப்பு நிலையத்தில் எரிபொருளை பெற்றுக்கொள்வதற்கு ஏற்பாடு செய்து தாருங்கள் என கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்றிலிருந்து 1500 லீற்றர் டீசலை பெற்றுக்கொள்வதற்கு பேச்சுவார்த்தை ஊடாக நடவடிக்கை எடுப்பதாக அரச அதிபர் தெரிவித்தார். இதனை தொடர்ந்து மாவட்ட செயலகத்தில் கூடியிருந்த தனியார் பேருந்து உரிமையாளர்கள் போராட்டத்தை கைவிட்டு கலைந்து சென்றனர். (4-6-100)

# இடப்பற்றாக்குறையால் தொங்கியபடி பயணம்

## பேருந்தை நிறுத்திவிட்டு இறங்கி சென்ற சாரதி



(குருமன்காடு)

வவுனியாவில் இருந்து பூவரசன்குளம் ஊடாக செட்டிகுளம் சென்ற இ.போ.சபைக்கு சொந்தமான பேருந்தில் அதிக சனநெரிசல் ஏற்பட்டு பேருந்தில் பலர் தொங்கிக் கொண்டு பயணித்தமையால் பேருந்தை இடைநடுவே நிறுத்தி விட்டு சாரதி இறங்கிச் சென்ற சம்பவம் ஒன்று கடந்த 4 ஆம் திகதி இடம்பெற்றுள்ளது.

வவுனியா பேருந்து நிலையத்தில் இருந்து புறப்பட்ட இ.போ.சபை பேருந்து இலுப்பையடியை அடைந்த போது பேருந்துக்குள் நெரிசல் ஏற்பட்டது.

இதனையடுத்து பேருந்து மன்னார் வீதி, குருமன்காடு ஆகிய பகுதிகளில் உள்ள பேருந்து தரிப்பிடங்களில் நிறுத்தி பயணிக்களை ஏற்றிய போது பேருந்தில் இடப்பற்றாக்குறை ஏற்பட்டதுடன், இளைஞர்கள் பலரும் இடம் இன்மையால் பேருந்தின் பின்புறத்திலும் வாயில் பகுதியிலும் தொங்கியபடி பயணித்தனர்.

தொடர்ந்து சென்ற பேருந்து பட்டானிச்சூர் பகுதியை அடைந்த போது அங்கும் மக்கள் நின்றமையால் ஏற்ற முடியாது எனத் தெரிவித்தும், பேருந்தில் பாதுகாப்பற்ற வகையில் பயணிகளை கொண்டு செல்ல முடியாது எனத் தெரிவித்தும் சாரதி பேருந்தை நிறுத்தி பேருந்தில் இருந்து இறங்கி சென்றிருந்தார்.

இது குறித்து சாலை முகாமையாளருக்கும் அவர் தெரியப்படுத்தியிருந்தார்.

இதனால் பேருந்தில் பயணித்த பலரும் வீடு செல்ல முடியாது இரவு வேளையில் அந்தரித்துக் கொண்டிருந்தனர்.

பின்னர் இ.போ.சபையின் வவுனியா சாலையில் இருந்து பிறிதொரு பேருந்து அனுப்பி வைக்கப்பட்டது.

இதனையடுத்து சுமார் ஒரு மணித்தியாலத்திற்கு பின்னர் இரண்டு இ.போ.சபை பேருந்துகளிலும் மக்கள் ஏறி புறப்பட்டுச் சென்றனர். (4-6-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோட்டாவால் தீர்வை வழங்க முடியாது

## தயாசிறி எம்.பி.

(கொழும்பு)
சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பதற்கு பரந்த தேசிய வேலைத்திட்டம் அவசியம்.

தற்போதைய நெருக்கடி நிலைமைக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவி னாலோ அல்லது அவர் தலைமையிலான அரசா ங்கத்தினாலோ தீர்வு காண முடியாது என சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயா சிறி ஜயசேகர தெரிவி த்தார்.

குறுகிய கால மற்றும் நீண்ட கால திட்டங்களின் மூலம் நாட்டை மீட்டெடுக்க வேண் டும்.

நாட்டில் ஸ்திரத்தன்மை உறுதிப்படுத்தும் அதே நேரத்தில் தேர்தலை உரிய நேரத்தில் நடத்த வேண்டும் என்றும் அவர் தெரிவித் தார். (நி-6)

# சட்டவிரோதமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முற்பட்ட 45 பேர் கைது

(திருமலை)
சட்டவிரோதமாக அவுஸ் திரேலியாவுக்குச் செல்ல முற் பட்ட 45 பேரை இலங்கை கடற் படையினர் கைது செய்துள்ள னர்.

திருகோணமலை - குச்ச வெளி கடற்பரப்பில் வைத்து இவர்கள் நேற்று புதன்கிழமை அதிகாலை கைது செய்யப்பட் டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் தற்போது குச்ச வெளி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்ப ட்டுள்ளதுடன், மேலதிக விசா ரணைகளை குச்சவெளி பொலி ஸார் முன்னெடுத்து வருகி ன்றனர். (நி-6)

# எரிபொருள் நிரப்பு நிலையம் மீது தாக்குதல்

(கொழும்பு)
வெல்லவாய பொலிஸ் பிரி விற்குட்பட்ட வெல்லவாய நக ரில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் மீது தாக்குதல் சம்ப வம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

எரிபொருள் வழங்கப் படும் வேளையில் எரிபொருள் தீர் ந்துவிட்டதாக அறி வித்த போது சிலர் அதற்கு எதிர்ப்புத் தெரி வித்ததாக பொலிஸார் தெரி வித்தனர்.

பின்னர், எரிபொருளைப் பெற வந்தவர்கள் அமைதியற்ற வகையில் நடந்து கொண்டது டன், எரிபொருள் நிரப்பு நிலை யத்தின் மீது கற்கள் மற்றும் போத்தல்களால் தாக் கியுள்ள னர்.

இதில் பொலிஸ் உத்தியோ கத்தர் ஒருவர் காயமடைந்து ள்ளதுடன், எரிபொருள் நிரப்பு நிலையத்தின் பெயர் பலகை யும் சேதப்படுத்தப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் இது வரை 13 சந்தேக நபர்களும் 20 மோட்டார்சைக்கிள்களும்கைது செய்யப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் நீதிமன்றில் ஆஜர்படுத் தப்படவுள்ளனர். (நி-6)

# நாட்டை விட்டு வெளியேறுவோர் எண்ணிக்கை தினசரி அதிகரிப்பு

## பரபரப்பாகும் கட்டுநாயக்க விமான நிலையம்

(கொழும்பு)
இலங்கையை விட்டு நாளா ந்தம் நூற்றுக்கணக்கான மக் கள் வெளி யேறி வருவதாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன.

பணிக்காக ஒரு சிலர் மாத் திரமே சென்று வந்த நிலை யில் தற்போது தினசரி நூற் றுக்கணக்கான இளைஞர்கள், யுவதிகள் வெளியேறுவதாக விமான நிலைய தகவல்கள் தெரிவிக்கின்றன. இந் நிலை யில் தற்போது பரபரப்பான ஒரு இடமாக கட்டுநாயக்க விமான நிலையம் மாறியுள்ள நிலை மையை வெளிப்படுத் தும் பல புகைப்படங் கள் இணையத்தில் வெளியாகியுள்ளமை குறிப் பிடத்தக்கது. (நி)

# டிசம்பர் வரை டொலர் பிரச்சினை தீவிரமாகும்

## கபீர் ஹாசிம்

(கொழும்பு)
எதிர்வரும் ஓகஸ்ட் மாத த்தில் கடன் மீளமைப்பு தொடர்பான அறிக்கை வெளி யாகும் என்று ரணில் விக் கிரமசிங்க கூறினாலும் அது இடம் பெறாது என்று எதிர்க்கட்சி தெரிவித்துள்ளது. பாராளும ன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் இந்த கருத்தை, நேற்று பாரா ளுமன்றில் வெளியிட்டுள்ளார்.

இந்த அறிக்கையை வெளி யிட குறைந்து 6 மாதங்கள் அல்லது ஒரு வருடமாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். இதன் காரணமாக எதிர் வரும் டிசம்பர் வரையில் டொலர் பிரச்சினை தீவிரமாகும் என்று கபீர் ஹாசிம் தெரிவித் துள்ளார். எனவே இம்மாதம் முதல் டிசம்பர் வரையில் எரி பொருள் உட்பட்ட அவசிய கொள்வனவுகளுக்காக 3 பில் லியன் டொலர்களை பெற்றுக் கொள்வதில் பிரச்சினை இரு க்கும் என்றும் கபீர் ஹாசிம் தெரிவித்தார். (நி-6)

# இலங்கைக்கு கொண்டு வரப்படவிருந்த 100 கிலோ கடலட்டை மீட்பு

(முறிகண்டி)
இலங்கைக்கு கடத்திகொண் டுவர பதுக்கி வைக்கப்பட்டிருந்த 100 கிலோ கடல் அட்டைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது டன் ஒருவர் கைது செய்யப்ப ட்டுள்ளார்.

மண்டபம் வனத்துறை யினர் நேற்று முன்தினம் இராமேஸ்வரம் புலிதேவன் நகர்பகுதியில் தேடுதல் வேட் டையில் ஈடுபட்டிருந்த போது தனிநபர் ஒருவரது வீட் டில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த 100 கிலோ தடை செய்யப்பட்ட கடல் அட்டைகளை பறிமுதல் செய்து விசாரணை செய்து வருகின் றனர்.

இது தொடர்பாக ஒருவரை கைது செய்ததுடன், தலை மறைவான மற்றொரு வரை தேடி வருகின்றனர்.(4-6-100)

# பாடசாலைகளை மீள திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(கொழும்பு)
எரிபொருள் இன்மையி னால் தற்காலிகமாக மூடப் பட்டுள்ள பாடசாலைகளை மீள திறப்பதற்கு நடவடி க்கை எடுக்குமாறு அகில இலங்கை ஐக்கிய ஆசி ரியர்கள் சேவை சங்கத்தின் தலைவர் யல்வெல பஞ்ஞா சேகர தேரர் கோரிக்கை விடுத்துள்ளார்.

சிறுவர்களின் கல்வி தொடர்பில் சிந்தித்து பாடசா லைகளை மீள திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அவர் கேட் டுக்கொண்டுள்ளார்.

எதிர்கால சந்ததியினர் தொடர்பில் சிந்திக்க வேண் டிய நாட்டின் தலைவர்கள் சுய நலமாக சிந்தித்தமையே இதற்கு பிரதான காரணமா கும் என அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

ஆட்சியாளர்கள் பொரு ளாதாரத்தினை சீரழித்து தற்போதைய சிறுவர்களின் கல்வியில் தாக்கத்தினை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 250 | 250 | 240 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 250 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 600 |
| தக்காளி | 300 | 250 | 300 | 300 |
| மரவள்ளிக்கிழங்கு | 300 | 280 | 200 | 160 |
| கோவா | 260 | 300 | 320 | 350 |
| கரட் | 250 | 330 | 350 | 400 |
| பூசணி | 240 | 200 | 240 | 250 |
| புடோல் | 160 | 150 | 160 | 240 |
| வாழைக்காய் | 120 | 90 | 80 | 80 |
| சின்ன வெங்காயம் | 350 | 350 | 200-500 | 500 |
| பெரிய வெங்காயம் | 200 | 210 | 200 | 200 |
| பாகற்காய் | 300 | 400 | 350 | 500 |
| வெண்டிக்காய் | 200 | 180 | 150 | 300 |
| கருணைக் கிழங்கு | 160 | 220 | 240 | 240 |
| பயற்றங்காய் | 350 | 300 | 250 | 320 |
| லீக்ஸ் | 250 | 240 | 250 | 300 |
| பீற்றூட் | 300 | 280 | 250 | 350 |
| கறிமிளகாய் | 400 | 350 | 480 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 350 | 400 |
| போஞ்சி | 350 | 400 | 350 | 500 |
| கத்தரிதம்புள்ள | 200 | 200 | — | 320 |
| கீரை - 1 பிடி | 100 | 50 | 80 | 80 |
| தேசிக்காய் | 300 | 300 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 70 | 50-80 | 50-70 |
| இராசவள்ளி | 200 | 250 | 200 | 250 |
| வெங்காயப்பூ | 300 | 380 | 400 | 450 |
| முள்ளங்கி | 160 | 120 | — | 200 |
| பொன்னாங்காணி | 60 | 90 | 80 | 50 |
| வல்லாரை | 20 | 20 | 50 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | — | 160 |

# திருகோணமலையில் உதயமானது 'கோ ஹோம் கோட்டா'



(திருமலை)
திருகோணமலை - சேரு நுவர RB -02 பகுதியில் ஜனா திபதியை பதவி விலகு மாறு வலியுறுத்தி 'கோ ஹோம் கோட்டா' போராட்டக்களம் நேற்று முன்தினம் செவ்வாய் க்கிழமை ஆரம் பமானது.

இப் போராட்டக்களமா னது சுழற்சிமுறையில் தொடர்ந்தும் செயற் படவுள்ளது. இதனை பொதுமக்கள் ஒன்று சேர்ந்து ஆரம்பித்துள்ளனர்.

ஜனா திபதி பதவி விலகு, பெற்றோல் இல்லை, டீசல் இல்லை, எரிவாயு இல்லை, கட்சி இனமத பேதமின்றி இலங்கையராய் ஒன்றிணை வோம் போன்ற கோசங்களை எழுப்பி போராட்டக்காரர்கள் எதிர்ப்பில் ஈடுபட்டனர். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அம்புலிமாமா

# கல் மனம் கரைந்ததே!

(நேற்றைய தொடர்ச்சி)

அவன் வைத்துள்ள குங்குமச் சிமிழை எடுத்து வந்து எனக்குக் கொடு. அப்போது உலகில் எந்த ஒரு சக்தியாலும் என்னை அடக்க முடியாது. நான் உனக்கு எப்போதும் உதவி வருவேன் என்றாள்.

ஜெயசேனனோ "இதை நான் செய்ய மாட்டேன். இவ்வுலகில் ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் உதவி புரிந்து கொள்ள வேண்டும். நீ பல்லூகனை மணந்து கொண்டால் நீங்கள் இருவருமே சக்தி சாலிகளாகி விடுவீர்கள். நீ பல்லூகனை விரும்பு. அவனும் உன்னை விரும்புவான். நான் சந்திரிகாவை விரும்பி மணக்கப் போவது போல உன் திருமணமும் நடக்கட்டும்" என்றான்.



முள்ளுகியும் யோசித்து "நீ சொல்வதே சரி. நான் பல்லூகனை மணந்து கொள்கிறேன். இந்தா குங்குமம். இதை அவனிடம் என் பரிசாகக் கொடு" என்றாள். ஜெயசேனனும் பல்லூகனிருக்கும் இடத்தை அடைந்து நடந்ததை எல்லாம் கூறி "நீ முள்ளுகியை மணந்தால் சுகப்படுவாய். அதனால் நீங்கள் இருவருமே உலகில் சக்தி சாலிகளாக விளங்குவீர்கள்" என்று விளக்கினான்,

முள்ளுகி குங்குமத்தைப் பரிசாக அனுப்பியது கண்டு பல்லூகன் பெரு மகிழ்ச்சி அடைந்தான். அவன் உடனேயே சந்திரிகாவை ஜெயசேனனிடம் ஒப்படைத்து அவர்களைக் காட்டுக்கு வெளியே கொண்டு வந்து விட்டான்.

அங்கிருந்த அரச குமாரர்கள் நடந்ததை எல்லாம் தெரிந்து கொண்டு "பல்லூகனும் முள்ளுகியும் கொடியவர்களாயிற்றே. அவர்களைக் கொல்லாமல் நீ வந்தது பெருந்தவறு" என்று ஜெயசேனனைக் கடிந்து கொண்டார்கள். ஜெய சேனனோ "இதுவரை அவர்கள் உலகில் யாருக்கும் எந்த விதமான கெடுதலையும் செய்யவில்லை. எனவே அவர்கள் என்ன செய்வார்களோ என்று வீண் கற்பனைகளில் மூழ்க வேண்டாம்" என்றான்.

அதுகேட்டு அரச குமாரர்கள் எதுவும் பேச முடியாமல் போயினர். சந்திரிகாவிற்கும் ஜெயசேனனுக்கும் விமர்சையாக விவாகம் நடைபெற்றது. அதற்கு புதிதாக தம்பதியர்களாகி விட்ட பல்லூகனும் முள்ளுகியும் வந்து அவர்களை வாழ்த்தி உலக அமைதிக்காக எல்லா விதத்திலும் உதவுவதாக வாக்களித்து விட்டுச் சென்றார்கள்.

(முற்றும்)

# சிலப்பதிகாரம்

## யார் அந்த தேவதை?

மன்னன் சேரன் செங்குட்டுவனின் காதுகளில் இன்னமும் அந்தப் பாடல் ஒலித்துக் கொண்டிருந்தது. மலை வாழ் மகளிரின் குரவைக் கூத்துப் பாடல் அது. மலைவளம் பார்ப்பதற்காகச் செங்குட்டுவன் அவ்போது பல்வேறு மலைப் பகுதிகளுக்குச் சென்று வருவது வழக்கம்

அன்றும் அவன் அவ்வாறு தன் பரிவாரங்களோடு வந்திருந்தான் சுற்றிப் பார்த்துக் கொண்டிருந்த போது அந்த வித்தியாசமான பாடலைக் கேட்டான். ஒரு வேங்கை மரத்தின் அடியில் மலை வாழ் பெண்கள் குரவைக் கூத்து ஆடிக் கொண்டிருந்தார்கள். நாட்டுப் பாடல்களிலும் கூத்திலும் கேலி, கிண்டல், நகைச்சுவை,




ஆழ்ந்த கருத்துகள் எல்லாம் எளிய மொழியில் இருப்பதை செங்குட்டுவன் ரசிப்பதுண்டு அது மாதிரி சுவாரசியமாக ஏதாவது தென்படுகிறதா என்று அன்றைக்கும் கவனித்தான். ஆனால் அது வழக்கத்துக்கு மாறான பாடலாக இருந்தது. இந்தப் பாட்டில் ஒரு பெண்ணின் மீது அவர்களுக்கு இருக்கும் அன்பும் பக்தியுமே அதிகமாகக் காணப் பட்டது

"முலையினால் மாமதுரை கோளிழைத்தாள்
காதல் தலைவனை
வானோர் தமராரும்
கூடிப் பலர்தொழு பத்
தினிக்குக் காட்டிக் கொடு
த்த நிலையொன்று
பாடுதும் யாம்"

என்று அவர்கள் பாடினார்கள் அவர்களது எல்லாப் பாடல்களிலுமே அந்தப் பத்தினிப் பெண் இடம் பெற்றிருந்தாள். பல்வேறு இடங்களைப் பார்த்துவிட்டு பேரியாற்றின் கரைக்கு வந்து சேர்ந்தான் அரசன். அங்கே தான், மணல் மேட்டில் அவன் தங்குவதற்கான இடம் அமைக்கப்பட்டிருந்தது. அங்கே தன் மனைவி , தம்பி இளங்கோவுடன் ஓய்வெடுத்தான் ஆனால், அவன்மனம் இன்னும் மலைவாழ் மக்கள் பாடிய பாடலிலேயே நிலைத்திருந்தது. யார் அந்தப் பெண்? அவர்கள் பாடியது யாரைப் பற்றி? அவள் நிஜப் பெண்ணா? கற்பனைப் பாத்திரமா?

என்ன அரசே, சிந்தனையில் உட்கார்ந்து விட்டீர்கள்? சிரித்தபடி வந்து உட்கார்ந்தார் தமிழ் ஆசான் சீத்தலைச் சாத்தனார் சிந்திக்கவேண்டியது அமைச்சர்களும் என் போன்ற புலவர்களும் தானே? உங்கள் வேலை செயற்படுவது மட்டுமே "ஏன். அரசர்கள் சிந்திக்கக்கூடாதா?"

சிந்திக்கலாம் அரசர்கள் சிந்திப்பது , செயற்படுவது இரண்டையுமே செய்யலாம் போர் என்று வரும் போது கூரான உடை வாளைச் சுழற்றி எதிரிகளை ஓடச்செய்ய உங்களால் முடியும் ஆனால் எங்களிடம் கூராக இருப்பது எழுத்தாணியும் மூளையும்தான் எங்களால் கருத்துக் களத்தில் சண்டையிட்டு ஜெயிக்கவும் முடியும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவினால் தவிர்க்க முடியாத ஒரு செயல் தாமதத்தால் நல்ல பலனை அளிக்கும் விதத்தில் முடிகின்றது. - செனேக்கா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழர் பண்பாட்டின் தகைமை கண்டு நெகிழ்ந்தோம்

தமிழ் மொழியில் உள்ள பண்பாடு என்ற சொற்பதம் தனித்துவமானது.

பண்பாடு என்பதன் பொருள் யாது எனக் கேட்டால், பண்பெனப்படுவது பாடறிந்து ஒழுகல் என்று கூறிவிடலாம்.

ஆனால் இன்னுமொருபடி மேலாக, பண்பு என்பதற்கு வள்ளுவப் பெருமான் சால்பு என்ற சொற்பதத்தைத் தந்து அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மையோடு ஐந்து சால்பு ஊன்றிய தூண் என்று விளக்கம் தந்தார்.

ஆக, பண்பாடு என்றால் அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை எனும் ஐந்து சால்புகளைக் கொண்டமைந்த உயர் குணம் எனக் கூறமுடியும்.

இங்குதான் தமிழர்களின் சால்பு எத்துணை உயர்வானதென்பதை நினைந்து நாம் பெருமையடைய முடிகிறது.

அதாவது இலங்கை மக்கள் பொருளாதார நெருக்கடியால் வாடிவதங்கி நிற்கின்ற இவ்வேளையில், ஈழத் தமிழ் மக்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற கருத்து தமிழகத்தில் எழுகிறது.

அதாவது இன்றைய இக்கட்டான நேரத்தில் தமிழக அரசு ஈழத் தமிழ் மக்களுக்கு உலர் உணவுகள் அடங்கிய நிவாரண உதவிகளைச் செய்ய வேண்டும் என்ற கருத்து எழுந்தபோது, இல்லை தமிழ் மக்களுக்கு மட்டுமன்றி இலங்கையிலுள்ள சிங்கள, முஸ்லிம் மக்களுக்கும் நிவாரண உதவி வழங்கப்பட வேண்டும் என்ற கருத்து உடனடியாகவே எழுகை பெறுகிறது.

அதிலும் இந்தக் கருத்து ஈழத் தமிழ் மக்களிடம் இருந்து எழுந்தது என்பதற்குள் இருக்கக்கூடிய தர்மம் கண்டு நாம் புளகாங்கிதம் அடையாமல் இருக்க முடியாது.

ஆக, தமிழக அரசின் நிவாரண உதவி, தேவைப்படக்கூடிய ஒட்டுமொத்த இலங்கை மக்களுக்குமாக அனுப்பி வைக்கப்பட்டு அந்த உதவி மக்களுக்கு வழங்கப்பட்டது.

ஈழத் தமிழ் மக்களைக் கொன்றொழித்த சிங்களப் பேரினவாதத்தின் கொடுஞ்செயலை காலம்தோறும் கண்டித்து வரும் தமிழக மக்கள்; நிவாரண உதவி என்று வந்தபோது, தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற பேதமை இன்றி இலங்கை மக்களுக்கான நிவாரணமாக வழங்கப்பட வேண்டும் என்று கருதினர் எனும்போதுதான் தமிழர்களின் சால்பு கண்டு மனித குலம் பெருமையடைய முடியும்.

இதை நாம் கூறும்போது இலங்கையில் கொரோனாத் தொற்றுக் காலத்தில் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்த முஸ்லிம் மக்களை எரியூட்டியதைக் காரணம் காட்டி இலங்கைக்கு எரிபொருள் வழங்க முடியாதென கட்டார் அரசு மறுத்து விட்டது என்ற செய்தி வெளிவருகிறது.

இங்குதான் தமிழர்களின் சால்பு எத்தன்மையதென்பது உணரப்படுகிறது.

## நீண்ட நாட்களுக்குப் பின் கோவிட் தொற்றால் மேலும் ஒருவர் மரணம்

(கொழும்பு)

இலங்கையில்கொரோனாத் தொற்று குறைவடைந்துள்ள நிலையில், நீண்ட நாட்களுக்குப் பிறகு நேற்று முன்தினம் கொரோனா மரணம் ஒன்று பதிவாகி உள்ளது.

60 வயதுக்கு மேற்பட்ட பெண்மணி ஒருவரே கொரோனாவால் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (ம-7)

## சுழிபுரத்தில் கசிப்புடன் இரு பெண்கள் கைது

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சுழிபுரம் மத்தி பகுதியில் இரண்டு பெண்கள் கசிப்புடன் வட்டுக்கோட்டை பொலிஸாரால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் குறித்து மேலும் தெரியவருகையில்,

சுழிபுரம் மத்தி பகுதியில் 5,000 மில்லிலீற்றர் கசிப்புடன் 68 வயதுடைய வயோதிபப் பெண்ணொருவர் வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை அதே பகுதியில் 95,000 மில்லிலீற்றர் கோடாவுடன் 41 வயதுடைய பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,104)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வெள்ளிக்கிழமை 08 ஆம் திகதி காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**கிளிநொச்சி பிரதேசத்தில்** 18 ஆவது வி.ஐ.ஆர் இராணுவ முகாம்- தேவிபுரம், 68 ஆம் பிரிவு இராணுவ முகாம் இரணைப்பாலை, 683 ஆம் பிரிவு இராணுவ முகாம் தேராவில், வெள்ளப்பள்ளம் சந்தி, 68 ஆவது பிரிவு - டயலொக் கோபுரம் இரணைப்பாலை, தேவிபுரம், டயலொக் கோபுரம்-வள்ளிபுனம் புதுக்குடியிருப்பு, இடைக்காட்டு சந்தி, இனியவாழ்வு இல்லம், இருட்டுமடு, குரவில் உடையார்கட்டு, மூங்கிலாறு வடக்கு, சுதந்திரபுரம், தேராவில், உடையார்கட்டு, உடையார் கட்டு வடக்கு, உடையார் கட்டு பாடசாலையடி, வள்ளிபுனம், வெள்ளப்பள்ளம் உடையார்கட்டு ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** மாந்தை சந்தி (திருக்கேதீஸ்வரம் கிராமம்), நாகத்தாழ்வு, திருக்கேதீஸ்வரம், திருக்கேதீஸ்வரம் மருத்துவமனை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## கொழும்பில் 140 இடங்களில் லிற்றோ எரிவாயுவை விநியோகிக்க ஏற்பாடு

(கொழும்பு)

கொழும்பில் ஜூலை 11 மற்றும் 12 ஆம் திகதிகளில் 140 இடங்களில் லிற்றோ எரிவாயு விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று பாராளுமன்றில் தெரிவித்தார்.

ஜூலை 9 ஆம் திகதியன்று எரிவாயு கப்பல் வரவுள்ளதாகவும், இதனையடுத்து ஜூலை 11 ஆம் திகதி முதல் விநியோகம் ஆரம்பிக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

கொழும்பில் ஜூலை 11 மற்றும் 12 ஆகிய திகதிகளில் தலா 100 கொள்கலன்கள் வீதம் 140 இடங்களில் 12.5 கிலோ எடையுள்ள 140,000 எரிவாயு கொள்கலன்களை விநியோகிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்பின் நாளாந்தம் மொத்தம் 25,000 கொள்கலன்கள் விநியோகிக்கப்படும் என்று ரணில் குறிப்பிட்டார். இந்த நிலையில் ஜூலை இறுதி அல்லது ஆகஸ்ட் முதல் வாரத்தில் எரிவாயு தட்டுப்பாடு தீர்க்கப்படும் என்று நம்பிக்கை தெரிவித்த அவர், அடுத்த நான்கு மாதங்களுக்குள் தட்டுப்பாடு இல்லாமல் சமையல் எரிவாயுவை வழங்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.(ம-7)

## 3,600 லீற்றர் மண்ணெண்ணையுடன் முழங்காவிலில் ஒருவர் கைது

முழங்காவில்பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நாச்சிக்குடாப்பகுதியில் விற்பனைக்காக மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 3,600 லீற்றர் மண்ணெண்ணையுடன் சந்தேகநபர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை இன்று நீதிமன்றில் முற்படுத்த முழங்காவில் பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முழங்காவில் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி நலின் இந்திக தெரிவித்துள்ளார். (ம-7,316)

## இறுவட்டு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வல்லிபுர ஆழ்வார் ஆலயம் மீது பிரபல பாடலாசிரியர் கவிஞர் பொன். சுகந்தனால் இயற்றப்பட்டு எழுதப்பட்ட பாடல்கள் தென்னிந்திய முன்னணிப் பாடகர்களால் பாடப்பட்டு வல்லிபுரக் கானங்கள் என்னும் இறுவட்டாக வெளிவரவுள்ளது.

வல்லிபுர மாயவரின் அடியவரான அமரர். திருமதி. கமலாதேவி தேவராஜா ஞாபகார்த்த வெளியீடாக எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கொழும்பு இராமகிருஷ்ணா வீதியில் அமைந்துள்ள சண்முகாஸ் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு கொழும்பு றோயல் கல்லூரி ஆசிரியர் தே.முகுந்தன் தலைமை தாங்கவுள்ளதோடு பிரதமவிருந்தினராக ஓய்வுநிலை கல்வி அமைச்சின்மேலதிக செயலாளரும் அரசாங்க அதிபருமாயிருந்த உடுவை எஸ்.தில்லைநடராசா கலந்துகொள்ளவுள்ளார்.(4-6)

## சத்திய தரிசனம்



### அவதாரம்

❖ **அவதாரம்** என்ற சொல் **"அவதரணம்"** என்ற சொல்லிலிருந்து வந்தது. அவதரணம் என்றால் இறங்குவது என்று பொருள். பூவுலகில் வாழும் மக்களை தெய்வீகத்துக்கு உயர்த்துவதற்காக பகவான் அவதரிக்கிறார். எவ்விதமான பயமோ, தயக்கமோ இல்லாமல் பக்தர்கள் தன்னை அணுகுவதற்கு வசதியாக எல்லா மனிதர்களைப் போன்ற நடையுடை பாவனைகளை கைக்கொள்கிறார்.

❖ ஒருமுறை டாக்டர். கோகக் அவர்கள் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவிடம் அவதாரத்தின் சிறப்பியல்புகள், பண்பு நலன்கள் யாவை என்று கேட்டார். அவதாரங்களுக்கு 16 கலைகள் உண்டு. மனிதர்களுக்கு 9 கலைகள் மட்டுமே உண்டு. பார்த்தல், கேட்டல், முகர்தல், சுவைத்தல், தொட்டுணர்தல் ஆகிய ஐந்து இயல்புகளும் மனிதர்களுக்கும் விலங்குகளுக்கும் பொதுவானவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# போர்களின் பூமி உக்ரைன் அதன் வரலாற்றுப் பார்வை

கலாநிதி க.தவலிங்கம் (ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்) 25

இவையெல்லாம் உக்ரைனிய மக்களிடம் பெரிய எதிர்ப்பைச் சந்தித்தது. உயர்கல்வியின் ஒரு பகுதியான ரஷ்ய மயமாக்கலுக்காக கீவ்வில் அமைச்சர்கள் மட்டத்தில் தயாரிக்கப்பட்ட திட்டங்கள் ஒரு போதும் நடைமுறையில் செயற்படுத்த முடியவில்லை.

சோவியத் தேசத்தின் கருத்தியல் க்ருத்தை அறிமுகப்படுத்துவதற்குப் பதிலாக, 24 வது கம்யூனிஸ்ட் கட்சி காங்கிரஸில் ப்ரெஷ்நேவ் "ஒரு புதிய வரலாற்று மக்கள் சமூகம் - சோவியத் மக்கள்" பற்றி பேசினார். இக் கருத்தியல் கம்யூனிசத்தை விடுத்து வளர்ந்த சோசலிசத்தின் கருத்தியலை அறிமுகப்படுத்தியது.

1982 இல் ப்ரெஷ்நேவ் இறந்த போது, சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச் செயலாளர் புதவிக்கு யூரி ஆண்ட்ரோபோவ் பதவியேற்றார். அவர் அதிகாரத்தை எடுத்துக் கொண்ட ஒரு வருடத்தில் (1982-1984) இறந்தார். ஆண்ட்ரோபோவை அடுத்து கான்ஸ்டான்டின் செர்னென்கோ ஒரு வருட காலமே (1984-1985) ஆட்சி செய்தார். செர்னென்கோவுக்குப் பிறகு 1985 இல் மைக்கேல் கோர்பச்சேவ் ப்தவியேற்றார்.

**சோவியத் ஒன்றியத் தலைவர்கள்**



யூரி ஆண்ட்ரோபோவ் (1982-1984)



கான்ஸ்டான்டின் செர்னென்கோ (1984-1985)

### சோவியத் உக்ரைனியத் தலைவர் ஷெலெஸ்டின் கீழ் உக்ரைன் (1963-1972)

1970 களின் நடுப்பகுதியில் லியோனிட் ப்ரெஷ்நேவ் முதன்மை நிலையை அடையும் வரை, குருஷ்சேவின் வெளியேற்றத்திற்குப் பிறகு மாஸ்கோவில் அதிகாரம் ப்ரெஷ்நேவ், அலெக்ஸி கோசிகின் மற்றும் பிடோர்னி ஆகிய மூவரடங்கிய கூட்டுத் தலைமையால் பகிர்ந்து கொள்ளப்பட்டது. பிடோர்னியின் ஆதரவாளரான ஷெலஸ்ட், குருஷ்சேவ் வெளியேற்றப்பட்ட ஒரு மாதத்திற்குள் பொலிட்பீரோவின் (Politburo) முழு உறுப்பினரானார், (குறிப்பு- பொலிட்பீரோ, ரஷ்ய மற்றும் சோவியத் வரலாற்றில், சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் மிக உயர்ந்த கொள்கை உருவாக்கும் அமைப்பாகும்.) இருப்பினும், ப்ரெஷ்நேவின் ஆதரவாளரான ஷெர்பிட்ஸ்கி, சிறிது காலத்திலேயே மீள வந்தார். அவர் 1965 இல் கீவ்வில் மீண்டும் பிரதமரானார் மற்றும் 1966 இல் மொஸ்கோவில் உள்ள பொலிட்பீரோவின் வேட்பாளர் உறுப்பினரானார்.

ஷெலஸ்ட் பற்றி கூறுவதானால் அவர் உக்ரைனிய சோவியத் சோசலிஸ்ட் குடியரசின் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் செயலாளராக 1963 முதல் 1972 வரை இருந்தவர். இதைவிட சோவியத் ஒன்றியத்தின் கம்யூனிஸ்ட் கட்சியின் பொலிட்பீரோ உறுப்பினராகவும், சோவியத் ஒன்றியத்தின் அமைச்சர்கள் குழுவின் துணைத் தலைவராகவும் இருந்தவராவார்.

அவரது பதவிக் காலத்தில் மற்றும் அவரது எச்சரிக்கையான ஊக்கத்தின் காரணமாக, உக்ரைனிய தேசிய கலாசாரத்தின் சுருக்கமான ஆனால் கவனிக்கத்தக்க மறுமலர்ச்சி ஏற்பட்டது. 1968 இல், ஷெலஸ்ட்டுக்கு "சோசலிச தொழிலாளர் நாயகன்" பட்டம் வழங்கப்பட்டது.

மொஸ்கோவில் புதிய தலைமை குருஷ்சேவின் பல பரவலாக்கும் நடவடிக்கைகளை விரைவாக மாற்றியமைத்தால் ஆரம்பத்தில் அது ரஷ்யரல்லாதவர்களிடம் அதிக உணர்வு அலையைத் தோற்றுவித்தது. பரவலாக்கலை மாற்றியமைக்கும் நடவடிக்கை மொஸ்கோ நிர்வாகம் அதன் தேசியக் கொள்கையில் இருந்து பின் வாங்குவது போல் தென்பட்டது. மேலும் இது உக்ரைனில் ஷெலெஸ்ட் சகாப்தத்தை வகைப்படுத்தும் மூன்று முக்கிய போக்குகளுக்கு வழிவகுத்தது. அவை (1) வளர்ந்து வரும் கலாசார மறுமலர்ச்சி, (2) கீவ்வின் அரசியல் உயரடுக்கின் அதிக உறுதிப்பாடு மற்றும் (3) பெரிய அளவிலான அதிருப்தி இயக்கத்தின் வளர்ச்சி ஆகும்.

ஷெலெஸ்ட். ஆட்சி உக்ரைனிய கலாசாரத்தை ஆதரித்ததோடு மட்டுமல்லாமல், உக்ரைனின் பொருளாதார நலன்களை பாதுகாத்தார், சோவியத் ஒன்றியத்தின் முதலீட்டில் அதிக பங்கு மற்றும் பொருளாதார நிர்வாகத்தில் உக்ரைனுக்கு அதிக குடியரசுக் கட்டுப்பாட்டை வலியுறுத்தினார். இந்த முயற்சிகள் உக்ரைனிய மக்களின் பார்வையில் கட்சியின் சட்டபூர்வமான தன்மையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டிருந்தன. ஷெலெஸ்டின் பதவிக் காலத்தில், உக்ரைனில் கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர் எண்ணிக்கை அனைத்து தொழிற்சங்க சராசரியை விட இரண்டு மடங்கு அதிகரித்து 1971 இல் 2.5 மில்லியனை எட்டியது.

**ஷெலெஸ்ட். ஆட்சி உக்ரைனிய கலாசாரத்தை ஆதரித்ததோடு மட்டுமல்லாமல், உக்ரைனின் பொருளாதார நலன்களை பாதுகாத்தார், சோவியத் ஒன்றியத்தின் முதலீட்டில் அதிக பங்கு மற்றும் பொருளாதார நிர்வாகத்தில் உக்ரைனுக்கு அதிக குடியரசுக் கட்டுப்பாட்டை வலியுறுத்தினார். இது மக்களுக்கு திருப்தியை ஏற்படுத்தியது.**

1950 களின் பிற்பகுதியிலும் 60 களின் முற்பகுதியிலும் அதிருப்தி இயக்கம் ஷெலெஸ்டின் கீழ் தொடர்ந்து வளர்ச்சியடைந்தது. 1965 இல் 20 எதிர்ப்பாளர்களின் முதல் கைதுகளும் விசாரணைகளும் நிகழ்ந்தன. மேலும் அவர்களின் அமைப்பாளரான வியாசெஸ்லாவ் சோர்னோவில் என்ற பத்திரிகையாளரும் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

அதன்பிறகு தேசிய எதிர்ப்பு இயக்கம் வேகமாக வளர்ந்தது. இதன் நடவடிக்கைகளாக அதிகாரிகளுக்கு எதிர்ப்புக் கடிதங்கள் மற்றும் மனுக்கள் அனுப்புதல் மற்றும் விவாத வட்டங்களை உருவாக்குதல் மற்றும் பொதுக் கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் போன்றவை நடைபெற்றன. இதனால் உக்ரைனில் 1970 இல் தொடங்கி, ஷெலஸ்ட் ஆட்சி முடிவுக்கு வருவதற்கான அறிகுறிகள் இருந்தன. உக்ரைனில் உள்ள கேஜிபியின் (KGP) தலைவர் மாற்றப்பட்டார். அக்காலத்தில் சோவியத் எதிர்ப்பு நடவடிக்கைகள் மற்றும் "முதலாளித்துவ தேசியவாதம்" பற்றிய கடுமையான சொல்லாட்சிகள் அதிகரித்தன.

1971 இல் ப்ரெஷ்நேவின் ஆதரவாளரும் ஷெலஸ்டின் போட்டியாளருமான ஷெர்பிட்ஸ்கி பொலிட்பீரோவின் முழு உறுப்பினராக உயர்த்தப்பட்டார். ஜனவரி மற்றும் ஏப்ரல் 1972 க்கு இடையில், உக்ரைனில் பரவிய அடக்குமுறை அலையில் பல நூறு அதிருப்தியாளர்கள் மற்றும் கலாசார ஆர்வலர்கள் கைது செய்யப்பட்டனர். மே மாதம் ஷெலஸ்ட் உக்ரைனின் கட்சித் தலைவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார். அந்த இடத்திற்கு ஷெர்பிட்ஸ்கி நியமிக்கப்பட்டார். ஷெலஸ்ட் மேலுமொரு வருடம் பொலிட்பீரோ உறுப்பினராகவும் மொஸ்கோவில் துணைப் பிரதமராகவும் தொடர்ந்தார், ஆனால் மே 1973 இல் அவர் தனது மீதமுள்ள கட்சி மற்றும் அரசாங்க பதவிகளை இழந்தார்.

### சோவியத் உக்ரைனியத் தலைவர் ஷெர்பிட்ஸ்கியின் கீழ் உக்ரைன் (1972-1989)

உக்ரைனிய சோவியத் அரசியல்வாதி. 1972 முதல் 1989 வரை உக்ரைனிய சோவியத் சோசலிஸ்ட் குடியரசின் கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் செயலாளராக இருந்தார். உக்ரைனிய சோவியத் சோசலிச குடியரசில் இவரது ஆட்சியானது, உக்ரைனிய கலாசாரத்தின் மீதான பரந்த தாக்குதலுடன், மறுமைய மயமாக்கல் மற்றும் ஒடுக்குமுறையின் விரிவாக்கப்பட்ட கொள்கைகளால் வகைப்படுத்தப்பட்டது. மேலும் ரஷ்யாமயமாக்கல் (Russification) தீவிரப்படுத்தப்பட்டது.

**உக்ரைனிய சோவியத் சோசலிச குடியரசில் இவரது ஆட்சியானது, உக்ரைனிய கலாசாரத்தின் மீதான பரந்த தாக்குதலுடன், மறுமைய மயமாக்கல் மற்றும் ஒடுக்குமுறையின் விரிவாக்கப்பட்ட கொள்கைகளால் வகைப்படுத்தப்பட்டது. மேலும் ரஷ்யாமயமாக்கல் (Russification) தீவிரப்படுத்தப்பட்டது.**

ரஷ்யமயமாக்கல் **(Russification)** என்பது கலாசார ஒருங்கிணைப்பு செயல்முறையின் ஒரு வடிவமாகும், இதன் போது ரஷ்யரல்லாத சமூகங்கள் (தன்னிச்சையாகவோ அல்லது விருப்பமாகவோ) ரஷ்ய கலாசாரத்திற்கு ஆதரவாக தங்கள் கலாசாரத்தையும் மொழியையும் விட்டுவிட வேண்டும். ஒரு வரலாற்று அர்த்தத்தில், இந்த வார்த்தை ரஷ்ய பேரரசு மற்றும் சோவியத் யூனியனின் உத்தியோகபூர்வ மற்றும் அதிகாரப்பூர்வமற்ற கொள்கைகளை அவர்களின் தேசிய தொகுதிகள் மற்றும் ரஷ்யாவில் உள்ள தேசிய சிறுபான்மையினரைக் குறிக்கிறது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பண்ணை...

முதியவரின் சடலமொன்று நேற்றுப் புதன் கிழமை மீட்கப்பட்டுள்ளது.

கடற்றொழிலாளர்கள் தொழிலுக்காக சென்றபோது சடலமொன்று மிதப்பதைக் கண்டு பொலிஸாருக்கு தகவல் வழங் கப்பட்டதை அடுத்து பொலிஸார் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7.33)

## மண்ணெண்ணெ...

கப்படும் எனவும் பிரதமர் குறிப் பிட்டுள்ளார்.

இதேவேளை, மீன்பிடி கப்பல்களுக்கு டீசல், எரிவாயு மற்றும் ஐஸ் போன்ற வற்றை தொடர்ச்சியாக வழங்குவதற்கு கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் தெரிவித்துள்ளார்.

கடற்றொழில் துறையினர் எதிர்நோக் கும் நெருக்கடிகள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் திலீப் வெதஆரச்சி நேற்று பாராளுமன்றத்தில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே பிரதமர் இவ்வாறு தெரிவித்தார். (ம-7)

## சீமெந்து பக்கெட்...

பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஒரு வருட காலத்திற்கு முன்னர் 50 கிலோ கிராம் சிமெந்து பக்கெட் 900 ரூபாயாக காணப்பட்டபோதிலும், இந்த ஒரு வருட காலப்பகுதிக்குள் சீமெந்து பக்கெட்டின் விலை 6 சந்தர்ப்பங்களில் அதிகரிக்கப் பட்டுள்ளது.

நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் எரிபொருட்களின் விலையேற்றம் ஆகியன காரணமாக சீமெந்து பக்கெட்டுக்களை பல்வேறு இடங்களுக்கும் கொண்டு செல் வதில் பாரிய அசௌகரியங்களையும், போக்குவரத்து பிரச்சினைகளையும் எதிர் கொண்டு வருவதாக சிமெந்து விநியோ கஸ்தர்கள் சங்கத்தினர் குறிப்பிடுகின்ற னர். (ம-7)

## காரைநகர் ஐஓசி...

பட்டதால் குழப்பநிலை ஏற்பட்டது.

பெற்றோல் பம்பி பழுதடைந்துவிட் டதாகத் தெரிவிக்கப்பட்டதையடுத்து அங்கு நீண்ட வரிசையில் காத்திருந்த முச்சக்கர வண்டிகளின் சாரதிகள், மோட்டார் சைக் கிள்களில் சென்ற பொதுமக்கள் எதிர்ப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

நேற்று காலை காரைநகர் எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு பெற்றோல் மற்றும் டீசல் என்பன வந்திறங்கிய நிலையில் காலை 8 மணியளவில் முச்சக்கர வண் டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் சிலவற்றுக்கு பெற்றோல் நிரப்பப்பட்ட நிலை யில் இடைநிறுத்தப்பட்டது.

டீசல் வழங்குவதற்காக பெற்றோல் விநியோகம் இடைநிறுத்தப்படுவதாக தெரிவிக்கப்பட்ட போதும் பின்னர் பெற்றோல் பம்பிபழுதடைந்துவிட்டதாக கூறப்பட்டது.

இந்த நிலையில் அங்கு நீண்ட வரிசை யில் காத்திருந்தோர் எதிர்ப்பு நவடிக்கையில் ஈடுபட்டனர். (ம-7)

## எரிபொருள் கப்ப...

தொடர்ந்து கருத்துரைத்த அவர், "இந்த கப்பல், வரவில்லையெனில், எதிர்வரும் 22 மற்றும் 23ஆம் திகதியன்று ஐஓசி நிறுவனத்தின் கப்பல்கள் மூலம் மாத்தி ரமே பெற்றோலை இலங்கைக்கு பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறிருக்க, மலேசியாவின் நிறு வனம் ஒன்று எதிர்வரும் 13ஆம் திகதி யன்று பெற்றோலை இலங்கைக்கு எடுத்து வர இணங்கியுள்ளது.

ஆனால் அவர்களிடம் பெற்றோலை வழமையான விலையை விட அதிக விலைக்கே கொள்வனவு செய்யப்பட வுள்ளது.

எனவே அதிக விலைக்கு இந்த பெற் றோலை கொள்வனவு செய்வதா? அல்லது 22 ஆம் திகதி ஐஓசி நிறுவனத்தின் கப்பல் வரும் வரை பெற்றோல் இல்லாமல் இருப்பதா என்பதை பாராளுமன்றமே தீர்மானிக்கவேண்டும்.

இந்த கப்பலின் பெற்றோலை கொள் வனவு செய்வதற்காக மத்திய வங்கி, டொலர் ஒதுக்கீட்டையும் செய்துள்ளது.

இந்தநிலையில் இது குறித்து நாளை அமைச்சின் செயலாளரை, கோப் குழுவின் முன் அழைத்து முடிவெடுக்குமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொள்கி றேன்", எனக் குறிப்பிட்டார். (ம-7)

## தவறிவிழுந்த...

முந்துள்ளார்.

இதில் பருத்தித்துறை புலோலி மத் தியைச் சேர்ந்த [illegible] (வயது-65) [illegible] தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த ஜூலை முதலாம் திகதி வெள் ளிக்கிழமை தென்னைமரத்துக்கு ஏணி வைத்து ஏறிய அவர் தவறிவிழுந்துள்ளார்.

முதியவர் உடனடியாக மந்திகை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு மேல திக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார். எனி னும் சிகிச்சை பலனின்றி நேற்று உயி ழந்தார்.

மரண விசாரணையை யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மேற்கொண்டார். (ம-7.33)

## சர்வகட்சி...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாசவின் தலைமையில் பாராளுமன்ற கட்டடத்தொகுதியில் நேற்று பிற்பகல் நடைபெற்றது.

ஐக்கிய மக்கள் சக்தி, அதன் பங்காளிக் கட்சிகள், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்கள் தேசிய கூட்டணி , தேசிய சுதந்திர முன்னணி தலைமையிலான 9 பங்காளிக் கட்சிகளின் பிரதிநிதிகளும் பாராளுமன்றத்தில் சுயாதீ னமாக செயற்படும் பாராளுமன்ற உறுப்பி னர்கள் சிலரும் இந்த கலந்துரையாடலில் பங்கேற்றிருந்தனர்.

நாட்டு மக்கள் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு களை பெற்றுக்கொ டுப்பதற்கு அனை த்து தரப்பினரும் ஒன்றிணைந்து சட் டப்பூர்வமான சர்வ கட்சி அரசாங்க மொ ன்றை விரைவில் ஸ்தாபிக்க இதன் போது இணக்கம் காணப்பட்டுள்ளது. அத்துடன், எதிர்க் கட்சியின் அனை த்து தலைவர்களை யும் பிரதிநிதித்து வப்படுத்தும் வகை யில், அரசியல் குழு வொன்றையும்பொரு ளாதார குழுவொன் றையும் நியமிப்பத ற்கு நேற்று தீர்மா னம் எடுக்கப்பட்டது. (ம-7)

## முற்ப...

தனது மோச மான பொருளாதார நெருக்கடியை எதிர் கொண்டுள்ள இலங் கையிடம்எரிவாயு எரிபொருள் போன் றவற்றை கொள் வனவு செய்வதற் கான டொலர்கள் முடிவடைந்துள்ள தால் இந்தியா எரி வாயுமற்றும்டீசலை வழங்குவதை நிறு த்தியுள்ளது. இல ங்கை பெற்றோ லிய கூட்டுத்தாப னம்பணத்தைவழங் கும்வரை சில கப் பல்களை அனுப்பு வதை இந்தியா தாம தித்துள்ளது என [illegible] [illegible]வே ண்டாம் என தெரி வித்த இந்திய அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

முன்கட்டணம் செலுத்தப்பட்டுள்ளதை உறுதி செய்வதற்காக இந்திய அரசாங் கத்தின் எண்ணெய் சுத்திகரிப்பு கூட்டுத் தாபனத்தின் நான்கு எரிபொருள் கப்பல்கள் காத்திருப்பது அமைச்சர் காஞ்சன விஜே சேகர வெளியிட்ட டுவிட்டர் பதிவின் மூலம் தெரியவந்துள்ளது.

அந்நிய செலாவணி கையிருப்பு முற் றாக முடிவடைந்த நிலையில் உள்ள இலங்கை எரிபொருளை கொள்வனவு செய்வதற்காக இந்தியாவின் புதிய கடன் உதவியை 500 மில்லியன் டொலர் எதிர்பார்த்துள்ளது. (ம-7)

## கொழும்பில்...

பேர் கைதுசெய்யப்பட்டு பின்னர் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் நேற்று முற்பகல் ஜனாதிபதி மாளிகையை முற்றுகையிட்டு ஆர்ப்பாட் டத்தில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை வீட்டுக்குப் போகுமாறு வலியுறுத்தியே இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேம தாஸ, ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார ஆகியோர் சட்டத்தரணிகளுடன் நேரடி யாகப் பொலிஸ் நிலையத்துக்குச் சென்று தேவையான சட்ட உதவிகளை மேற் கொண்டனர். (ம-7)

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 06/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1286
வெற்றி இலக்கங்கள்: மகரம் 1 7 7 3 3 6

### கொவிசெத

திகதி 2022.07.06 | சீட்டிழுப்பு இலக்கம் 3050
ஆங்கில எழுத்து D | வெற்றி இலக்கங்கள் 05 08 59 69

### மெகா பவர்

திகதி 06/07/2022
சீட்டிழுப்பு இலக்கம் 1156
வெற்றி எழுத்து B | சுப்பர் இலக்கம் 22 | வெற்றி இலக்கங்கள் 26 49 53 79

### ஹந்தஹன (HANDAHANA)

சீட்டிழுப்பு திகதி 2022.07.06
சீட்டிழுப்பு இலக்கம் 117
வெற்றி இலக்கங்கள்: கடகம் 24 27 29 61 கடகம்

### மஹஜன சம்பத

திகதி 2022/07/06
சீட்டிழுப்பு இலக்கம் 4808
ஆங்கில எழுத்து R | வெல்லப்பட்ட இலக்கங்கள் 7 9 2 9 3 0

### தன நிதானய

திகதி -2022.07.06
சீட்டிழுப்பு இலக்கம் - 838
ஆங்கில எழுத்து M | வெற்றி இலக்கங்கள் 02 18 48 49

### அத கோடிபதி

புதன்கிழமை
சீட்டிழுப்பு இல : 1609
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி : 2022.07.06
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 3,936,680/-
வெற்றி இலக்கங்கள் 37 47 58 66 | ஆங்கில எழுத்து P

### சனிதா

புதன்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2022.07.06
சீட்டிழுப்பு இல : 3944
வர்ணம் : ஊதா
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 2,647,400/-
வெற்றி இலக்கங்கள் 03 42 52 69 | ஆங்கில எழுத்து V

### ராசி

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,484,154/-
திகதி 2022-07-06
வெற்றி வாரம் 3495
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 02 16 30 54 | மேஷம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 6,306,340/-

### லக்ன வாசனா (12)

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்: H 38 27 31 34 62
சீட்டிழுப்பு வாரம் 959 | வர்ணம் பச்சை | திகதி 2022.07.06 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 246,794,023/-
தொலை பேசி : 011-2 333 546-47 Web : www.dlb.lk

### ஜயோதா (Jayoda)

சீட்டிழுப்பு வாரம் 1833 | சீட்டிழுப்பு திகதி 2022-07-06
வெற்றி இலக்கங்கள் 04 19 38 64 | ஆங்கில எழுத்து T
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 33,853,096/-
தொ. பே.: 0112 333 546/47 Web: www.dlb.lk

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1783 | நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2022.07.06 | தினம் புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் R 34 35 36 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,078,140/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினால்

# பொறுப்புக்களை ஏற்கத் தயார்

## ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க



(கொழும்பு)

**ஜனாதிபதியும் பிரதமரும் பதவி விலகினால் பொறுப்புக்களை ஏற்க தாம் தயாரென ஜே.வி.பியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளர்.**

கட்சித் தலைமையகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டை ஸ்திரப்படுத்தவும் தற்போதைய நெருக்கடியில் இருந்து குறுகிய காலத்தில் வெளியே கொண்டுவர உதவவும் தயாராக இருக்கின்றோம்.

மேலும், நாட்டில் நிலவும் பல்வேறு குறைபாடுகளை குறுகிய காலத்தில் தீர்த்து வைப்பதற்கு தமது கட்சி தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணி தனித்து செயற்பட விரும்பவில்லை எனவும் நாட்டு பிரஜைகளும் வெளிநாடுகளில் உள்ள இலங்கையர்களும் இந்த நோக்கத்திற்காக ஆதரவை வழங்குவார்கள் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

6 மாதங்கள் போன்ற குறுகிய காலத்திற்குள், பொருளாதார நெருக்கடிக்கான முதன்மைக் காரணங்களைச் சரிசெய்து நாட்டை ஸ்திரப்படுத்த முடியும் எனவும் தெரிவித்துள்ளார்.

நாட்டை ஸ்திரப்படுத்திய பின்னரே பொதுத் தேர்தலை நடத்தி, பொதுமக்களின் ஆணையுடன் புதிய அரசை நியமிக்க வேண்டும் எனவும் சுட்டிக் காட்டினார்.

எவ்வாறாயினும், சவாலை ஏற்றுக் கொண்டு தனது நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டுமாயின் அரச தலைவரும்பிரதமரும்பதவி விலக வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (ம-7)

# எரிபொருளை தருவிக்க ஒத்துழைப்பை வழங்குங்கள்

## எதிர்க்கட்சியினரிடம் எரிசக்தி அமைச்சர்



(கொழும்பு)

இலங்கைக்குத் தேவையான எரிபொருளை தருவிக்க ஒத்துழைப்பை வழங்குமாறு வலுசக்தித்துறை அமைச்சர் காஞ்சன விஜேசேகர எதிர்க்கட்சியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

போதியளவிலான எரிபெரருளை கொள்வனவு செய்வதற்கான இறக்குமதிக் கோரிக்கைகள் விடுக்கப்பட்டிருந்தாலும் போர்தியளவிலான டொலர் கையிருப்பில் இல்லாமையினால் பாரிய நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டிற்குத்தேவையான எரிபொருளை கொள்வனவு செய்தற்கான பல்வேறு முயற்சிகளையும் அரசாங்கம் முன்னெடுப்பதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார். (ம-7)

## கூட்ட நெரிசலில்...

நேற்று முன்தினம் மாலை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருகையில்,

யாழ்ப்பாணத்தில் இருந்து பருத்தித்துறை நோக்கி பயணித்த பேருந்தில் பயணம் செய்திருந்த இளைஞர் ஒருவர் பருத்தித்துறை முதலாம் கட்டை சந்தி நிறுத்தத்தில் இறங்கியதும் மயங்கி சரிந்து விழுந்துள்ளார்.

உடனடியாக பருத்தித்துறை ஆதார வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்று அனுமதிக்கப்பட்டார். அங்கு பரிசோதிக்கப்பட்ட போது இளைஞர் உயிரிழந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து அவரது உடல் பிரேத பரிசோதனை மேற்கொள்வதற்காக யாழ்.போதனா வைத்திய சாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

குறித்த பேருந்தில் அதிக பயணிகள் பயணம் மேற்கொண்டதனால் கூட்ட நெரிசல் காணப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. (ம-7)


**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✔ ONLINE APPLICATIONS
✔ VISA APPOINTMENTS
✔ PASSPORT APPLICATION
✔ POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.
• STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா
Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு இலங்கை விசா நீட்புத்து தரப்படும்
(C-4569)
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம். V2 TRAVELS
0777-068-777

**மணமகள் தேவை**

யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 32 வயதுடைய உயர் வருமானம் பெறும் மணமகனுக்கு மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படவில்லை.
தொடர்பு (12079)
077 116 5961

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (11484)
076 825 7716 (ஆகாஸ்)

**கட்டார் நாட்டில் வேலை வாய்ப்பு**

35 வயதுக்கு உட்பட்ட ஆண்/ பெண் (மோட்டார் சைக்கிள் சாரதி அனுமதிப் பத்திரம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை) இருபாலாருக்கும் மாதம் 150,000/= மேல் வருமானம் பெறக்கூடிய வகையில் வேலை வாய்ப்பு
(12081)
071 431 7986

**உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு**

அன்பு வாசகர்களே!
உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

தொடர்புகளுக்கு:
தொலைபேசி:
076 097 3127
021 221 7603
Viber: 076 636 3378
E.mail:
valampurii@yahoo.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 07.07.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.